# போர்க்களப் ஞானங்கள்



பெனி...

# போர்க்களப் பூபாளங்கள்

பெனி

லொயோலா கல்லூரி
சென்னை - 34

# PORKALA POOBAALANGAL

Collection of Poems
By
BENNY (M. S. BENEDICT) ©

Published by
THE JUSUIT PROVINCE
31, Clifford place
Colomkbo - 4
Sri Lanka.

First Edition : March 1996

Price : Rs 25

Art : Daniel

Cover Design:
Michael Earnest and Jothi.

Laser Typeset set and Printed by

**Jo Jo Graphics**
No.*20*, Sowrashtra Nagar II Street,
Choolai Medu, Madras - 94
Ph: 429191

**நன்றி**

இலங்கை மாநில இயேசு சபை முதல்வர்
**Rev. Fr. Peter Kurukula Aratchi S.J.**

தொகுத்து எழுதிய தோழர்கள்
ஜோ. சேவியர், பாஸ்கர்

ஆற்றுப்படுத்தி அணிந்துரை நல்கிய
பேராசிரியர். செ.தனராசு

ஓவியத்தால் மெருகூட்டிய
ஓவியர் டானியல்

ஆசியுரை அளித்த, கல்லூரி முதல்வர்
தந்தை தம்புராஜ் சே.ச.
வாழ்த்துரை வழங்கிய
'கவிக்கோ' அப்துல் ரகுமான்
தமிழ்த்துறைத் தலைவர் சாமுவேல்
பெர்க்மன்ஸ் ஹால் இயக்குனர்
தந்தை எல். எக்ஸ்.ஜெரோம் சே.ச

அட்டைப் படத்தால் அலங்கரித்த நண்பர்
மைக்கல் ஏனர்ஸ்ட், செல்வி ஜோதி

நூல்வடிவம் கொடுத்த
**JO JO GRAPHICS**
மற்றும்
புஷ்பா, கிங்ஸ்லி,
ஜெயராஜ் அனைவருக்கும்

*என் நன்றி!*

## இந்நூலாசிரியரின் பிற படைப்புகள்

வார இதழ்களில் பெண்ணியம் (அச்சில்)
தமிழ் இதழ்களில் பெண்களின் சித்திரிப்பு
பற்றி ஒரு விரிவானப் பார்வை

ஆத்மாவின் கீதைகள் (அச்சில்)
ஆவியின் அனல் இதழில் தொடராக
எழுதிய ஆன்மீகக் கவிதைகளின் தொகுப்பு

எழுதிக்கொண்டிருப்பது...
இனிகோ காவியம்
இயேசு சபை ஸ்தாபகர் புனித
லொயோலா இஞ்ஞாசியாரின் வாழ்க்கை
வரலாறு - புதுக்கவிதையில்

ஆகஸ்ட் வெளியீடு
இலங்கையின் சமகாலப் பிரச்சினைகளை
மையமாக வைத்து
டானியல் பெனி இணைந்து வழங்கும்
திருவழிப்பாட்டுப் பாடல்கள் - ஒலிநாடா.


கல்லூரி
வசந்தங்கள்

இந்தப் பூபாளம்...

இன்றைய நாளைய
இலயோலாவின்
இளைய சிற்பிகளுக்கு...

படைத்த கவிதைகள் அநேகம், அவற்றில் சிலவற்றையே இத்தொகுதியில் இணைத் திருக்கிறேன்.

என் படைப்புகள் வெறும அழகியல் இலக்கிய மாக அமையாமல், நான் வளர்ந்து வளரும் சமுதாயத்தின் மேடுபள்ளங்களை வெளிப் படுத்தும் கோலங்களாக அமையவேண்டும் என்பதே என் அவா.

இந்தத் தொகுதியில்....

கொஞ்சம் நட்பு .... கொஞ்சம் இயற்கை.... இவற்றோடு

தமிழகத்தில் தமிழர்கள்

இலங்கையில் தமிழர்கள்

இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்கள்

எனத் தமிழினத்தின் சமகாலப் பிரச்சினை களை இனங்கண்டு கவிதை வடிவில் வெளிச்சம் போட்டுக் காண்பித்திருக்கிறேன் என்பதில் களிப் படைகிறேன்.

இருபத்தோராம் நூற்றாண்டின் விளிம்பில், தனிமனித வாழ்வும், சமுகவாழ்வும் போர்க்கள மாக மாறிவரும் காலச் சூழலில், என் கவிதை கள் மனிதம் மலர பூபாளம் பாடட்டும்.

விமரிசனங்கள் வரவேற்கப்படுகின்றன.

*அன்புடன்*
*பெனி*
*(எம்.எஸ்.பெனடிக்)*
*7.3.1995*

பெர்க்மன்ஸ் ஹால்
இலயோலாக் கல்லூரி
சென்னை - 34.

# ஏனிந்த பூபாளம்?

கவிதை என்ற சொல் எனக்கு அறிமுகமாகியதே நான் ஆறாம் வகுப்பு படிக்கும் போதுதான்.

ஐந்தாம் வகுப்புவரை தோட்டப்பள்ளிக் கூடத்தில் படித்துவிட்டு, ஆறாம் வகுப்பிற்கு, பொகவந்தலாவ ஹோலிறோசரி தமிழ் வித்தியா லயத்திற்கு வந்தேன்.

"மாணவர் இலக்கிய மன்றம்" இலக்கிய ஆர்வ லர்களுக்குக் கவிதை பாடக்களம் அமைத்துக் கொடுத்தது.

"பள்ளிக்குக் கட்டடித்தேன்" என்பதே நான் பாடிய முதல் கவிதை. தொடர்ந்து என்னை எழுதத் தூண்டியது, பள்ளித் தோழர்களின் ரசனையும், ஆசிரியர்களின் ஊக்குவிப்புமே. என் கவிதைகள் தொகுதியாக வெளிவரும் வேளையில், என் பள்ளி நாட்களையும், நண்பர் களையும், என் கவிதைகளை அரங்கேற்றிய ஹோலிறோசரி வித்தியாலய மேடையையும் நன்றியுணர்வுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

பத்தாம் வகுப்பை முடித்துவிட்டு, மட்டக் களைப்பு புனித மைக்கல்ஸ் கல்லூரியில் உயர்தரம் பயின்றபோது இலங்கையின் தேசிய நாளிதழ்களான சிந்தாமணி, தினகரன் பத்திரிக்கைகளில் அவ்வப்போது எழுதியதுண்டு.

இயேசு சபையில் சேர்ந்தபின் எழுதுவதற்கு மேலும் சந்தர்ப்பம் கிடைத்தது.

என்னுள் வெளிப்பட்ட தமிழார்வத்தை உணர்ந்த இலங்கை இயேசு சபை மாநில முதல்வர், என்னை இளங்கலை தமிழ் இலக்கியம் பயில சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

இந்த மூன்றாண்டுகளில் கவியரங்குகளில், சிற்றி தழ்களில், போட்டிகளில், கல்லூரியில் நான்

"இயற்கை தன் பணியை
இடைவிடாமல் செய்கிறது
மனிதன்தான்
சோர்ந்து போகிறான்" என
மானிட எழுச்சிக்கு குரல்
கொடுக்கின்றார்.

மொத்தத்தில் பெனியின் இக்கவிதை தொகுப்பு வாசிப்பவருக்கு ஒரு உதிவேகத்தை ஊட்டுகிறது. அவரது எழுதுகோலிலிருந்து மேலும் பல படைப் புகள் பிறக்கட்டும்.

மாணவரிடையே ஒளிந்துள்ள திறமைகள் முறையாய் வெளிப்பட்டு ஒளிர்ந்திட வழியாவதே ஒவேஷன். சமகால சமுதாய விடுதலைக்குச் சாதனைபுரிய மாணவரைச் சங்கற்பம் ஏற்றுச் சவால்களாய் மாற்றும்படி அறிவுறுத்துவதே மாணவர் பேரவைக்கு ஒரு மனு.

எந்தமிழ் நாட்டைச் சொல்கையில்...
தன்புகழ் பரப்பத் தரணியெல்லாம்
போஸ்ட்டர்:- இதைக்
கண்டும் காணாமல் கண்மூடி
மௌனிகளாய்
கவலையின்றி வாழுகின்ற
களங்கத்தைப் பாடுகிறேன் எனத் தான் பாடுவதற்குக் காரணத்தைக் காட்டுகின்றார். "நீரிணைக்கு அப்பால்" உள்ளோர்...

"வேட்டொலிகள் கேட்டுக்கொண்டே
பாட்டொலிகள் எழுப்புகிறோம்"
என்னும் போது
"போர்க்களப் பூபாளங்கள்"
என்பது நூலின் தலைப்பாக அமைவது
மிகப்பொருத்தமே.

மலையக மாருதத்தில்...
"உழைத்த பரம்பரை தழைத்து ஒரு முறை
உரிமை கேட்பதில் என்ன குறை உடல்
இளைத்துத் தேய உழைக்கு வர்க்கம்
எழுச்சி பெறுவதில் என்ன குறை?
என்ற வரிகளில் கவிஞர் காசி
ஆனந்தனை கண்முன் நிறுத்துகின்றார்.

மனித உறவுகளையும் இயற்கையையும் பாடும்போது...

தையும் பண்படுத்தவே அன்றி மற்றவர் மனத்தைப் புண்படுத்த அன்று.

போர்க்களப் பூபாளங்கள்!

நூலின் பெயரே நூதனம்! இந்தப் பூபாளங்கள் பாடப்படுவது புரட்சி தேவைப் படும் புரையோடிப் போன சமுதாயப் போர்க் களத்தில்தான்!

விடுதலையென்னும் விடியலுக்குக் கட்டியங்கூறும் கருத்துச் சுரங்களால் கட்டப் பட்ட கவிதைப் பண்களே இந்தப் பூபாளங்கள்! அரசியல் சினிமாத் தலைமைகளிடமிருந்து மாணவரும், இந்தியத் தமிழரின் விந்தைப் போக்கினின்று ஈழத்தமிழரும், இலங்கை அரசின் இறுக்கத்திலிருந்து மலையகத் தமிழரும், செயற்கையான ரசனை வாழ்வினின்று இயற்கை யான மனித நேய முருகியல் வாழ்வும் விடுதலை பெற்று வீறுகொண்டெழும் விடியலுக்காய்ப் பாடப்படுவதையே...

கல்லூரி வசந்தங்கள்

எந்தமிழ் நாடெனும் போதினேலே...

நீரிணைக்கு அப்பால்...

மலையக மாருதம்...

வார்த்தைகள் இல்லாத பாஷைகள் என்னும் ஐஞ்சிறு பகுதிகளில் அமைந்த பூபாளங்கள்!

கல்லூரி வசந்தங்களில்... மிடுக்கிடும் உடுக்களிடை நிலவாய் உலாவரும் இலயோலாவை வாசகப் புது முகங்கட்கு அறிமுகம் செய்கிறது ஆற்றுப்படை!

# அணிந்துரை

பேராசியர் செ.தனராசு M.A., M.Ed.M.Phil

பெனி!

இவர் ஆளுமையோ தனி. வாழும் நாட்டால் ஈழத்தார். தீந்தமிழ்த் தேட்டத்தில் இவர் ஒரு தமிழ்த்தேனி. தமிழறிவைத் தேடுவதில் இவரதோ தனிப்பானி. பட்டப்படிப்பில் கலை இளைஞர். பட்டறிவில் கலைமுதல்வர். திராவிடச் சொற்களைச் சொல்லித்தந்த நல்லூர் ஞானப்பிரகாசியாரின் நல்லறிவை நாளும் கற்பவர். உலகெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்க ஒல்லும் வகையெல்லாம் உழைத்த தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் ஆற்றலைப் போற்று பவர். தமிழினத்தைத் தட்டி எழுப்ப தமிழ்ப் பெருமையைக் கொட்டி முழக்குபவர்.

இவரின் கவிதை ஒவ்வொன்றும் இன்றைய நிலையின் நிழற்படம். கவிதையின் பாடுபொருள் ஒவ்வொன்றும் கண்டியர் படும் பாட்டில் கற்றுக்கொண்ட பாடம். சிலர் மனதை இவர் கருத்துச் சுடலாம்; சிந்திப்பவாக்கு அதன் உண்மை படலாம்.

இந்தத் தொகுதியில்... சிலவற்றைப் பாடுகிறார். சிலவற்றைச் சாடுகிறார். சிலரோடு பேசுகிறார். சிலவற்றை ஏசுகிறார். இப்படி சொல்வதால் சிலருக்கு உடம்பு எரியலாம். அப்படியாவது அவர்களுக்கு உலகம் புரியலாம். இவர் பாடுவதும் சாடுவதும் மாற்றார் மனத்

## அக்னி எழுத்துக்கள்

பெனியின் எழுத்துக்கள் அங்கியை உடுத்தவை அல்ல. அக்னியை உடுத்தவை இந்தக் கவிதைகள்...

கண்ணகியின் நெருப்புத்தனங்கள் எறியத் தொடங்கினால்... அரசியல் மதுரைகள் பற்றி எரியும் இந்தப்பூபாளம்.

தூரலில் தோன்றி மறையும் வானவில் அல்ல.வற்றாத ஜீவநதி. இறப்பு என்பது அதற்கு எப்போதும் இல்லை.

த. சாமுவேல் (தமிழ்த்துறைத் தலைவர்).

## பூபாளம் ஒரு ஆரம்பம்

பெனி என்றால் பெனடிக்ட் என்பதன் சுருக்கம். பெனடிக்ட் என்றால் முந்நாள் தமிழில் ஆசீர்வாதப்பர். ஆசீர்வாதப்பருக்கு இது ஒரு சின்ன ஆசீர். பெனடிக்ட் என்ற பெயரை இலத்தீன் மொழிமூலம் பிரித்து பொருள் கண்டால், 'நல்லதைச் சொல்லுதல்' என்று பொருள்...

பெனடிக்ட் இந்தக் கவிதைகளில் உள்ளத்தைச் சொல்லியிருக்கிறார். நல்லதைச் சொல்லியிருக்கிறார் நல்லவை அல்லாதவற்றைச் செய்து நாடுகளைத் தலைகுனிய வைப்பவர்கள் நாணித் தலைகுனியும்படி நல்லதைச் சொல்லியிருக்கிறார். வாழ்த்துகிறேன். பூபாளம் ஒரு ஆரம்பம் இன்னும் பலவரும் என்பதற்கு இது ஒரு முன்னோடி. 'நல்லதைச் சொல்பவர்' நாவிலிருந்தும், எழுதுகோலிலிருந்தும் இன்னும் பல உண்மைகள் வெளிவரட்டும். நன்மைகள் நிகழட்டும்.

எல். எக்ஸ். ஜெரோம் சே.ச.

# வாழ்த்துப் பூக்கள்

## கவிக்கோ. அப்துல் ரகுமான்

*புதிய யுகம் விழித்தெழட்டும்!*

தேயிலைக் கொழுந்துகள் போலவே
தாயகத்திலிருந்து பறிக்கப்பட்டுத் துயர
நெருப்பில் தங்கள் கண்ணீரிலேயே
வெந்து, யார் யாரோ பருகத் தங்கள்
சாற்றைத் தருபவர்கள் மலையகத் தமிழர்கள்.

அந்த மலையகத் தமிழர்களின் கண்ணீரில்
பூத்திருக்கின்றன இளங் கவிஞர் பெனியின்
கவிதைகள்.

போர்க்களம் நிரந்தரத் தூக்கத்தின் படுக்கை.
ஆனால் பெனி போர்க்களக் பூபாளங்களைப்
பாடுகிறார்.

இந்தப் பள்ளி எழுச்சி யாருக்காக? போர்க்
களங்களில் இறந்துபோன சத்தியங்களுக்கா?
இல்லை போர்க்களங்களுக்கா?
பெனியின் பூபாளத்தில் புதிய யுகம்
விழித்தெழட்டும்

அப்துல் ரகுமான்
*14.3.'96*

# ஆசியுரை

தந்தை **A.J.** தம்புராஜ் கல்லூரி முதல்வர்
லொயோலா கல்லூரி
சென்னை - 34

"போர்க்களப் பூபாளங்கள் என்ற கவிதை நூலை எழுதியுள்ள பெனியை நெஞ்சார வாழ்த்து கிறேன.

உலகம் போர்க்களத்தில் அகப்பட்டு வேதனைக்குரல் கொடுக்கும் இந்த யுகத்தில் பூபாளங்கள் பாடி அமைதியடைய மனிதனுக்கு ஓர் அறைகூவலாய் அமைந்துள்ளது இந்த நூல். இதயம் கண்ணீர் வடித்து ஆன்ம ராகம்பாடும் இப்பூபாளங் கள் மனித நேயத்திற்குப் புகழாரமாக இருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி.

இச்சிறு வயதிலேயே ஆன்ம ராகம்பாடி கவிதையின் சிகரத்தை அடைந்துள்ள பெனி, லண்டனில் உள்ள பெரிய பென் மனிபோல மனுக்குலத்துக்கு நம்பிக்கை குரல் கொடுக்க வேண்டுமென்று ஆசிகூறுகிறேன்.

வாழ்க பெனியின் கவிதைப்பணி


வளர்க பெனியின் இதயராகம்.

# காணிக்கை

*

அன்பு அமைதி பக்தி
இவற்றை
சின்ன வயதிலேயே என்
நெஞ்சில் விதைத்த
என் அன்னை
திருமதி செசலி சவரிமுத்துவிற்கும்,
சமூக உணர்வை
என்னில் தட்டி எழுப்பிய
என் தந்தை
திரு.எம்.சவரிமுத்துவிற்கும்

நனைந்த கண்களுடன் ...
பெனி



# ஆற்றுப்படை

வாருங்கள்
புதுமுக மாணவர்களே
வாருங்கள்!

சென்னை வானத்தில்
எத்தனை எத்தனையோ
நட்சத்திரக் கல்லூரிகள்!
இருப்பினும் அங்கு
உலா வரும் ஒரேயொரு
நிலாக் கல்லூரி
இலயோலா!

இது
சென்னை மண்ணுக்கு ஒரு
ஷாட்லைட்.

இந்தக்
கிரகத்தில்
பிரவேசித்தவர்களெல்லாம்
வாழ்வின் சில
சிகரத்தைத் தொட்டவர்களே!

காம்புவுண்டுக்குள்
கால் வைத்தவுடனேயே ஒரு
புதிய பூமிக்குள்
போவதாய்ப் புரிகிறதல்லவா?

வாருங்கள் நண்பர்களே
வாருங்கள் - சற்று
வலப்பக்கம் திரும்புங்கள்
அதோ... கல்லூரியின்
தலைமைச் செயலகம்!
தலைமைச் செயலகத்தின்
தலைப்பாகை
ஜெரோம் டி சூசா ஹால்

இப்படி
இடப்பக்கம் வாருங்கள்!
நேற்றுப் பூப்பெய்திய
பெண்ணின்
நேர்வகிடு மாதிரி
நேரான பாதை

பாதையின் இரண்டு
பக்கங்களிலும் உள்ள
இரண்டு செவிகளுக்கும்
இத்தனை தோடுகளா?
அளவோடு வெட்டப்பட்ட
வளமான மரங்கள்!

அப்படியே
இடப்பக்க செவி வழியாக
உள்ளே நுழைந்தால்
மூலையில் அமைந்திருக்கும்
கல்லூரியின் மூளை - எம்
இயேசு சபையின் இல்லம்.

இங்கே பாருங்கள்
இதுதான் எங்கள்
பிரதான மண்டபம்.

இங்கு
கற்போர்க்கெல்லாம்
மங்களம் உண்டாகட்டும் - என்றுதானோ
மஞ்சள் நிறத்தில் - அந்த
மாடிக் கட்டடம்
மாண்புற நிற்கிறது?

இது கல்லாலும் மண்ணாலும்
கட்டப்பட்ட கட்டடமா?
அல்ல... அல்ல...!
முக்கால் நூற்றாண்டிற்கு முன்பு
பிரெஞ்சு தேசத்து
இயேசு சபைக் குருக்கள் - தங்கள்
உயிரையும் உடலையும்
உளியாக்கி உருக்கொடுத்த
உன்னதக் கோயில்!

இதன்
செங்கல்கள் ஒவ்வொன்றும் அந்தத்
தியாகச் சுடர்களின்
சேவையைச்
செரித்து வைத்திருக்கின்றன.

இது
காலுக்கு உதவாத
செருப்புக்களை
உற்பத்தி செய்யும்
கம்பெனிகளைப் போன்று
நாட்டிற்கு உதவாத
பட்டத்தாரிகளை
உற்பத்தி செய்யும்
உற்பத்திச் சாலை அல்ல!

இங்கு
பயில வருவோன்
பக்குவம் பெற்ற மனிதனாகப்
பரிணாமம் பெறுகிறான்!

இந்தப்
பேராசிரியர்களெல்லாம்
பேருக்கு ஆசிரியர்களல்ல;
இவர்கள்
பிரமனின்
படைப்புத் தொழிலில்
பங்கேற்கிறார்கள்!

எம்மை
சிந்தனை வளம் கொண்ட
சீர்திருத்தச் சிற்பிகளாய்
சிருஷ்டிப்பதே
இவர்கள்தானே!

பிரதான மண்டபத்தின்
முன்னிலையைப் பாருங்கள்
“பாரிஸ் பல்கலைக்கழகத்தில்
பயின்றபோது
வயதெனக்கு நாற்பது”
“கற்பதற்கு வயதில்லை”
“அறிவோடு கூடிய ஆற்றல்
ஆளுமையின் பாதையிலே ஆன்மீகம்
இதுவே எனக்குத் தேவை
இதுவே என் சேவை” என
அன்புக்குரல் கொடுத்து
அரவணைத்து வரவேற்கும்
இலயோலா இஞ்ஞாசியர்!

இயற்கையில்
இறைவனைக் கண்ட அந்த
வியத்தகு புனிதனுக்கு
சுற்றி நின்று காவல் காக்கும்
சுந்தரக் காவலர்கள் - அந்த
ரோயல் பாம்ஸ் மரங்கள்!

போவோம்
சற்றுத் தூரம்
அதோ... எங்கள்
ஆளுமைக்குத் தோழன்
நூல் நிலையம்.

அதற்கு
முண்டாசு கட்டியதுபோல்
பெட்ரம் பெருமண்டபம்!
உள்ளே பார்த்தீர்களா அந்த
மாணவ வண்டுகள்
புத்தகப் பூக்களுக்குள்
அறிவுத் தேனை
அள்ளிப் பருகுவதை!

நூலகத்தின் முன்
விடுதிக்குச் செல்லும் வீதி
விரல்களை விரித்துக்கொண்டே
நிற்கும் மரங்கள்
மரங்களில் வந்து
சுரங்கள் பாடும்
பச்சைக் கிளிகள்!

அடுத்து
அடுக்கு மாடிக் கட்டடத்தைப்
படுக்க வைத்த மாதிரி
அடுக்கடுக்காய்
அமைந்திருக்கும்
கல்லூரி ஹாஸ்ட்டல்கள்!

என்னது?
விண்ணுக்குப் பாயத்துடிக்கும்
விண்வெளிக் கலத்தை
நிமிர்த்தி வைத்த மாதிரி
ஆலயம்!

அப்படியே சற்றுத்
தூரம் தொடர்ந்தால்
கணிப்பொறிக் களம்
“லிபா”


அதோ...
பெர்க்மான்ஸ் இல்லம்
அதற்கு முன்னால்
ஜோடிக் காதலர்களாய்க்
கூடி நிற்கும் மரங்கள்.

நேராகப் பார்த்தாலோ
பாதை.
அண்ணாந்து பார்த்தால்
அடடா...
அது ஒரு மரச்சுரங்கம்!

ஒன்றை
விட்டு விட்டேன்
விளையாட்டு மைதானங்கள்.
கவிதைகள்
படைக்கப்படுவது
வகுப்பறைகளிலல்ல இந்த
மைதானங்களில் தான்!
காலையும் மாலையும்
கல்லூரிக் காளையரின்
விளையாட்டுக்கள்
நடன நாட்டியங்களாய்
தினம் தினம்
திடல்களில் அரங்கேறும்

புரிந்து விட்டதா
தோழர்களே இது
சென்னை மண்ணுக்கே
ஷாட்லைட் என்று?
ஆதலால்தான் இங்கு
அட்மிஷன் கிடைப்பது
விண்வெளிக்கு
விசா மாதிரி!

தேசத்தின் சிற்பிகளே நம்மைச்
செதுக்குவோம் வாருங்கள்
கற்பவை கற்று
கற்றபடி நிற்பதனால்
கல்லூரி பெருமையினைக்
காத்திடுவோம் வாருங்கள்!




இலயோலாவில் திருவிழா!
வளாகத்து வீதிகளில்
தோரணங்கள் அசைந்தாட
மரத்தடிப் போஸ்டர்கள்
காண்போரை வரவேற்கும்!

மூன்று நாளைக்கு
ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்
என்பதால்
மாணவர்களின் நெஞ்சுக்குள்
பட்டாம் பூச்சிகள்
வட்டமிடும்!

தொடக்க நாளன்று
மங்கள வாத்தியங்கள் முழங்க...
நகரத்தில்
இன்னொரு நகரமாய்
கல்லூரி காட்சி தரும்!

கல்லூரி மண்டபங்கள்
கருத்தரங்குக் களமாகும்!
பெட்ரம் பெருமண்டபம்

வளாகத்தை வளமாக்கும்
கலா நெஞ்சங்களின்
கலையரங்காய் மாற...
பாட்டுப் போட்டிகளில்
பரிசுகளைத் தட்டுவது
நீயா நானா என
மாணவச் சிற்பிகள்
மல்லுக்கு நிற்பர்!

விவாத மேடைகளின்
சொல் வீச்சுக்களில்
நடுவர்கள்
தொலைந்து போவார்கள்!

மேலைத்தேய
கீழைத்தேய
இசைகளின் சங்கமிப்பில் - பல
இளைய ராஜாக்கள்
எழுந்து வருவர்!

மேடைக்கு வந்த
வானத்துத் தாரகையாய்
ஆடைக்குள் ஆடும்
இளசுகளின் நாட்டியத்தில்
அக்களித்து முக்குளிப்பர்.

இலயோலாவின் நிலப்பரப்பில்
நில நடுக்கமோ?
மாணவர்களின் கைத்தட்டலில்
மண்டபம் அதிரும்!


வெளிக்குத் தெரியாத
விழுமியங்கள்
வேறு வேறு திறமைகள்
வெளிச்சத்திற்கு
விழைந்து வரும்!

அந்தரங்கத்தில் நடிக்கப்படும்
ஆத்மாவின் ராகங்கள்
ஆனந்தமாய் அரங்கேறும்.

கலைமகளும் இனிகோவும்
கைகோத்து நிற்பர்
புதிய உறவுகள்
புலப்படும்
நட்பு ஸ்திரமாகும்!

கல்லூரிமேல்
எமக்குள்ள காதல்
இன்னும் சற்று
இறுக்கமாகும்!

மனிதனின் வாழ்வில்
மறக்க முடியாதது
மாணவப் பருவமே அந்தக்
காளைப் பருவத்தில்
கலையாத கனவுகளை
நிலையாகச் சேர்ப்பது
கல்லூரிக் காலம்தான் என
இதயத்தில் எழுதப்படும்.




தமிழக மைந்தர்களே!
தேசத்தின்
நாளைய வேந்தர்களே!
வாழ்த்துக்கள்!
வளரட்டும் உங்கள் நற்பணி!

நீங்கள்
தேசத்தின் தேர்தல்களில்
ஜெயித்து வர
இன்று வைக்கப்படும்
ஒத்திகைதான்
கல்லூரித் தேர்தல்களோ?

இன்று
பலநூறு மாணவர்களுக்குத்
தலைமையேற்கும் நீங்கள் - நாளை
பலகோடி மக்கட்குத்
தலைவர் ஆகலாம்!

உங்கள் சரிதையில்
சாதனைகள்
சரித்திரம் படைக்க
புறப்பட்ட காலம்
கல்லூரிக் காலம் என
பொறித்து வைக்கலாம்!

எனவே
உங்களிடம்
சில கேள்விகளை
உரிமையுடன் கேட்கிறேன்!

நீங்கள்
உண்மைத் தலைவராய்
உலா வர வேண்டுமெனில்
அரசியல்வாதிகளின்
அடியொற்றிப் போகலாமா?

மாணவர்கள்
அரசியலை
திசை திருப்பலாம்!
அரசியல்
மாணவர்களைத்
திசை திருப்பலாமா?

கல்லூரிக் கொண்டாட்டங்களில்
ஆடம்பரம்
அளவோடு அவசியந்தான்.
ஆனால்...
நடிகை வீட்டு
நாய்க்குட்டிக்குப்
பிறந்தநாள் கொண்டாடும்
சினிமாக்காரன் பந்தாவைப்போல்
செயற்கைத்தனம் தேவைதானா?

பட்டாசு கொளுத்தி
வெற்றியினைரக் கொண்டாடுங்கள்!
உங்கள் பணி
மாணவருக்கு
மத்தாப்பாய்
மாறிவிடக் கூடாது!

இள ரத்தம்
எதற்கெடுத்தாலும்
உண்ணாவிரதம்
இருக்கச் சொல்லும்.
ஆனால்
எதற்கு உண்ணாவிரதம்
என்பதல்லவா முக்கியம்?

அரசியலில்
அஹிம்சையை
அறிமுகப்படுத்திய
காந்திஜியின் கொள்கையைக்
கண்டதற்கெல்லாம்
"உண்ணாவிரதம்" எனக்
களங்கப்படுத்துவதா?

தலைவனுக்குத்தேவை
இன்முகமே
'ஈகோ' அல்ல!
உங்கள் பாதங்கள்
இன்றைய
வி.ஐ.பிக்களின்
பாதச் சுவடுகளில்
படியக் கூடாது! - இங்கு
எந்தத் தலைவனுக்கு
மக்கள் மேல்
அக்கறையிருக்கிறது?

நீங்கள்
அரசியல் தலைவர்களின்
மாதிரிகையில் போகாதீர்கள்
ஏனெனில் உங்கள்
மாதிரிகையைப் பின்பற்ற
இங்கே ஒரு
தலைமுறை காத்திருக்கிறது!

பேரவைத் தலைவர்களே!
உங்களிடம்
பிரியமாகச் சில
வேண்டுகோள்கள்...


உங்கள் பணி,
அம்பலத்திற்கு வராத
மாணவர்களின் திறமைகளை
அடையாளம் கண்டு
அறிமுகப்படுத்துங்கள்!
நடுத்தர வர்க்கத்து
சராசரிகளைத் தேடிப்பிடித்து
நல்லதைச் செய்யுங்கள்!

சமுதாயத் தலைமைகள்
அடித்தள மாணவரிடமிருந்து
அரும்பி வர
அஸ்திவாரமிடுங்கள்!

சேற்றில் மலரும்
செந்தாமரைகளைத்
தேடிப்பிடித்து
செப்பனிடுங்கள்!

நாளைய
தமிழகத் தலைமைகள்
தமிழ்த் தலைமைகளாய்
தழைத்தோங்க்
தலைவர்களை உருவாக்குவதே
உங்கள்
தலையாய பணி என
சங்கற்பம் கொள்ளுங்கள்!
சவால்களாய் நில்லுங்கள்!!

*[மாணவர் குரல் செப்டம்பர் 1994]*




அதிசயங்கள் அனுபவங்கள்
அன்றாடம் நிகழ்கின்றன.
நாம்தான்
அடையாளம் காணத் தவறி விடுகின்றோம்!

எங்கெங்கும் மனிதர்கள்!
என்னைச் சுற்றி,
எப்போதும் சப்தங்கள்!

காலைப் பிரார்த்தனை!
கண்ணை மூடி வைத்து
காதைத் திறந்து வைத்தால்...

பறவைகள்
கூட்டுக்குள்ளேயே
கும்மாளமிடுகின்றன.
தொலை தூரத்தில்
காகம் ஒன்று கரைகிறது.
தென்றல் தீண்டலால்
இலைகள் அசைகின்றன.

கூடைப் பந்தாட்ட வீரர்கள்
மைதானத்தில் போராடுகிறார்கள்.
யாரோ வாளியில்
தண்ணீர் அள்ளுகிறார்கள்

தொலைபேசி ஒலிக்கிறது.
வாகனங்களின் ஆரவாரம்.
வைகை ரயிலின் சங்கொலி.
மாடிப்படியில்
யாரோ இறங்கி வரும்
காலடி ஓசை.

அதிசயங்கள் அனுபவங்கள்
அன்றாடம் நிகழ்கின்றன.

கல்லூரிக்குப் போகிறேன்
சூரியன்
கிழக்கு வானைக்
கடந்து விட்டான்.

இளஞ்சூட்டுக் கதிர்கள்
மேனியைத் தழுவுகையில்
அதிசயங்கள் அனுபவங்கள்

இது
இலையுதிர் காலம்
வீதியெங்கும் மரஇலைகள்
இவைகள்
என் வரவிற்காக
மரங்கள் தூவிய
பூவிதழ்களா?
அதிசயங்கள் அனுபவங்கள்!

வகுப்பறைக்குள் செல்லுகிறேன்.
கரும்பலகையில் எழுதப்பட்ட திருக்குறள்
ஒவ்வொரு நாள் திருக்குறளும்
ஒவ்வொரு ஞானோதயம்.

வகுப்பறையை நோட்டமிட்டால்
புன்முறுவல், புன்முறுவல்!

சூரியனின்
புன்முறுவலால் - பூமி
தினம் தினம் தன்னைப்
புதுப்பித்துக் கொள்வதைப்போல்
நண்பர்களின் புன்னகையால் நான்
புதுப்பிக்கப் படுகிறேன்!

என் எனிய தோழர்களே
இது அதிசயமல்லவா?
மூன்றாண்டுகளுக்கு முன்பு
எங்கெங்கோ வாழ்ந்தோம்.
ஈழம், சேலம்,
சிங்கப்பூர், குண்டூர்...
நதிகள்
சமுத்திரத்தில்
சங்கமிப்பதைப் போல் நாம்
லயோலாவில் சந்தித்தோம்.

இங்கு
'நீ'
'நான்' நிலைமாறி
நாம் ஆகிப்போனோம்.

லயோலா தமிழ்த் துறையை
நிலவென்று எண்ணி வந்தோம்.
தொட்டவுடன்தான் புரிந்தது - அதன்
மேடுகளும் பள்ளங்களும்!

என்றாலும்
இரண்டும் சேர்ந்ததே
முழு நிலா!

இங்குக்
கங்கையையும் பார்த்தோம்
கூவத்தையும் பார்த்தோம்
இரண்டும் இருப்பது
இந்தியாவில்தானே!

நாம்
பூக்களையும் பார்த்தோம்
முட்களையும் பார்த்தோம்
இரண்டு சேர்ந்ததுதானே பூச்செடி!

இனிய தோழர்களே,
இது அனுபவமல்லவா?
நேற்றுச் சந்தித்து
இன்று பழகி
நாளை பிரிகிறோம்!.

நாம்
பூமிக்கு வந்த
திருப்பயணிகள!

93 இல்,
ஒரே ரயிலில்
ஒரே பெட்டியில்
ஒன்றாகத் தொடங்கியது நம்
புதிய பயணம்!
96 இல்
அவரவர்களுக்குரிய
ஸ்டேஷன் வருகிறது
இறங்கிக் கொள்கிறோம்.

என் இனிய தோழர்களே
கல்லூரியில் கற்ற
கசப்பான அனுபவங்களை
'பாடம்' என்றெமண்ணிப்
பயணம் செய்வோம்

இனிமையான அனுபவங்களை
சுகமான நினைவுகளாய்
சுமந்து செல்வோம்.

எனக்குத் தெரியும்
காவிரி வற்றலாம் - நம்
நெஞ்சம் சுமக்கும்
"கல்லூரி வசந்தம்" - நாம்
வாழும் நாள் வரைக்கும்
வற்றாது நிலைத்திருக்கும்.

# எந்தமிழ் நாடெனும் போதினிலே



# இந்தப் பூபாளம்...

கல்லூரி மாணவன்
காண்கின்ற தமிழகம்.



# ஏன் பாடவேண்டும்?

என் இதயம் சொல்கிறது
'பாடு' என்று
பாடுகிறேன்.

பறவைகளின் பாடல் கேட்டுத்தான்
பொழுது விடிகிறது.

நாயின் பாடல் கேட்டுத்தான்
நள்ளிரவுத் திருடர்கள்
ஜாக்கிரதையாகின்றார்கள்!
வண்டின் பாடல் கேட்டுத்தான்
பூக்களில்
தேன் சுரக்கிறது.
கன்றின் பாடல் கேட்டுத்தான்
பசுவின் மடி
கறக்கின்றது!

அலையின் பாடல் கேட்டுத்தான்
கரையின் ஓரம் நனைகிறது!
மழையின் பாடல் கேட்டுத்தான்

மண்ணின் பரப்பு குளிர்கின்றது.
சுருதியுடன் பாட எனக்குக்
குரல்வளம் இல்லை நான்
ராகத்தோடு பாடவில்லை சமுக
தாகத்தோடு பாடுகிறேன்!

அன்னை மரியும்
அன்னை பராசக்தியும்
அடையாளம் மாறிப்போன
அலங்கோலத்தைப் பாடுகிறேன்!

அராஜகமே அரசியலாய்
அவதரித்தும் - நாம்
அமைதியாயிருக்கும்
அவலத்தைப் பாடுகிறேன்!

தன் புகழ் பரப்பத்
தரணியெல்லாம் போஸ்டர்! இதைக்
கண்டும் காணாமல்
கண்மூடி மௌனிகளாய்
கவலையின்றி வாழுகின்ற
களங்கத்தைப் பாடுகிறேன்!

சுயம் தொலைந்த
தொழுநோயாளிகளைக்
கொழுவில் வைத்து நாம்
தலைவர்களென்று
கூப்பாடு போடுகின்ற - அலங்
கோலத்தைப் பாடுகின்றேன்!

தன்மானமின்றி
சாஸ்டாங்கமாய் வீழும்
தன்னலப் பேர்வழிகளைப்
பெரியோராய்ப் போற்றுகின்ற
பேதமையைப் பாடுகின்றேன்!

தமிழா! நீ
துட்டுக்கு வால் பிடித்துப்
பிறருக்குத்
துதிபாடியது போதும் - இனி
நமக்காகப் பாடு!

இந்த சமூக அமைப்பில்
தனிமனிதனாய்ப் பாடுவது
சாத்தியமில்லை - வா
ஒன்றாகப் பாடுவோம்!

மானத்தைப் பாடுவோம்
மாண்புயரப் பாடுவோம் - நல்
வானத்தைப் பாடுவோம்
வயல்வெளியைப் பாடுவோம்
கானத்தைப் பாடுவோம்
காதலை நாம் பாடுவோம்

தாய்நாட்டைப் பாடுவோம்! தமிழ்
மோகத்தைப் பாடுவோம் கல்வித்
தாகத்தைப் பாடுவோம்
வேகத்தைப் பாடுவோம் புதிய
விடியலுக்குப் பாடுவோம்!

*(சென்னைத் துறைமுகத் தமிழ்ச்சங்கம் 26.9.1994 இல் நடத்திய கவியரங்கில் பாடியது)*

# வள்ளுவனிடம் பேசுகிறேன்....

வள்ளுவனே - தமிழ்
அள்ளிக் கொடுப்பதில்
ஆனந்தம் கொண்டவனே நீ
அறங்களை உலகிற்கு
வரங்களாய் ஈந்தாய்!
இம்மாநிலத்தாரோ வாங்கிய
வரத்தை மறந்துவிட்டு
அறத்தைத் தொலைத்துவிட்டு தம்
தரத்தையல்லவா
தாழ்த்திக் கொண்டார்கள்.

உலக இலக்கியங்களில்
அற இலக்கியங்களை
அதிகமாய்க் கொண்டது
எம் மொழியே!
அதற்கெதிராய் வாழ்வோரும்
எம்மவரே!

இங்கு
தலைவர்களெல்லாம்
ஒப்புவிக்கின்றார்கள் திருக்குறளை
தாளத்தோடு அதன்
ஆழம் புரியாமல்!

இங்கு
சுவர்களில் கூட
குறளை எழுதுகிறார்கள்
வாழ்க்கையைத் தவிர!

உன்
குறளை வெறும் குரலாகவும்
மேற்கோளாகவும் மேற்கொண்டு
கொல்கிறார்கள்!

நீ
வகுத்து வைத்ததை வாழ்ந்து காட்டாமல்
பகுத்துப் பார்த்தே பாவம் செய்கிறார்கள்

உன்
தத்துவங்களை,
வித்தகமாய் விட்டு விட்டு
வள்ளுவன் என்ன மதம்
வள்ளுவன் என்ன ஜாதி என
உன்னையே பிரித்து
ஊறு செய்கிறார்கள். - நீ
அறத்துப் பால், பொருட்பால் என
அனைத்தையும் பாடினாய்!
இவர்கள்
ஆண் பாலையும் பெண் பாலையும்
காமத்துப்பாலாக மட்டுமே
காண்கின்றார்கள்!

ஈரடி வெண்பாப் பாடிய
எந்தமிழ்ப் புலவனே நீ இன்றிருந்தால்
ஈரடியா தந்திருப்பாய்?
பேரிடியாய் மாறியன்றோ இப்
பேருலகை
அழித்திருப்பாய்!

# கண்ணதாசனுக்கு ஒரு கவிதைமடல்



"கண்ணா...!
இசைப்பண்ணால்
வாழ்ந்த கவி மன்னா!
உன்னால் தமிழ் வாழ
தமிழால் நீ வாழ இன்று
என்னால் கூட
கவிபாட முடிகிறது!

அந்நாள் உன் வாழ்வுதனை
இந்நாள் நான் எண்ணி
பண்ணால் பாடுகிறேன்
பாவலனே உன்றனக்கு! - பல
பெண்ணால் சீரழிந்தும் - அறிவுக்
கண்ணால் மீண்டெழுந்தும் - மனப்
புண்ணால் நீ பாடியவை
எந்நாளும் உலகாளும்!

காலங்கள் மாறினாலும் - உன்
திரையிசையின்
கோலங்கள் மாறா! - தமிழன்
நாளங்கள் செத்தாலும் - உன்
கீதங்கள் சாகா!

காரிருள் நிறைந்த
கனத்த ராத்திரியில் - உன்
தூரிகைப் பாடல்களைத்
துய்த்திடும் போது
பேரிடி வீழ்ந்தாலும்
பிரபஞ்சமே அழிந்தாலும்
சீரிய புலவனே உன்
செந்தமிழ் அழியாது!

தத்துவங்கள் பாடினாய்
சாத்திரங்கள் பாடினாய்
காதலைப் பாடினாய் இயேசு
காவியம் பாடினாய்
வனவாசம் படைத்தாய்
மனவாசம் படைத்தாய்
அஞ்ஞான வாசம்
படைக்கும் முன்பே - அந்தோ,
அவனியிலே மறைந்திட்டாய்!

விரசத்தில் வீழ்ந்தாய்
அரசியலில் ஆழ்ந்தாய்
கவிதையில் கரைந்தாய்
காமத்தில் திளைத்தாய்
இலக்கியத்தில் இழந்தாய்
பத்திரிகை படைத்தாய்
பாட்டுக்கள் வடித்தாய்
போதையில் புதைந்தாய்

ஆதலால்தான்
எப்படி வாழவேண்டும்
என்பதற்கும்
எப்படி வாழக்கூடாது
என்பதற்கும்
இலக்கணங்கள் வகுத்து - நீயே
இலக்கியமானாய்!

திரை இசைப்பாடல்களில்
சித்திரங்கள் தீட்டி வைத்தாய்!
நரையிலா இளமையாக
நற்கவி புனைந்து வைத்தாய்!
முறையான விளக்கத்தை இந்து
மதத்திற்குச் சொல்லி வைத்தாய்!
நிறைவான வாழ்விற்கு
நீதியினைப் போதித்தாய்!

எளிமையான சொற்களுக்கு
வலிமை சேர்த்தாய்,
மலிவான விலையில்
பனுவல்கள் தந்தாய்,
நலிவடையும் மனிதத்திற்கு
நம்பிக்கை யூட்டினாய்!

சிறுகூடற் பட்டியிலே
உள்ளெடுத்த காற்றை
சிக்காக்கோ நகரில்
செல்லவிட்ட பாவலனே

கலையுலகில் நீ
தொட்டு வைக்காத துறைகளில்லை!
விட்டு வைக்காத விஷயங்கள் இல்லை

வள்ளுவப் பரம்பரையில்
வாழ்ந்து மரித்தோனே - தமிழ்
அள்ளிக் கொடுப்பதில்
ஆனந்தம் கொண்டவனே
உன்னிடத்தை நிரப்ப
எத்தனை பேர் வந்தாலும்
உனக்கு நிகர் நீயேதான்
உண்மையாய் உரைக்கின்றேன்.



அந்த
அரசியல்வாதி
கட்சியில் புதிதாகச் சேர்ந்த
தொண்டனைப் பார்த்துக் கேட்டார்
"எத்தனை வரைக்கும் படித்திருக்கிறாய்?"

"மூனாம் வகுப்போடு
படிப்புக்கு முற்றுப்புள்ளி"
ஆழ்ந்த யோசனையில்
அயர்ந்து விட்ட தலைவரைத்
தொண்டன்
விசனத்தோடு வினவினான்.

"படிப்பு இல்லையென்று
பார்க்கிறீர்களா?"

"இல்லை;
கட்சியிலேயே
அதிகம் படித்தவன் என்ற
ஆணவம் இருக்குமோ என்று
அஞ்சுகிறேன்"



# ஒரு மாஜி நடிகையின் தீபாவளி

காலண்டரைப் பார்க்கிறேன்!
கண்ணாடியைப் பார்க்கிறேன்!
இது நானா, அல்லது
இன்னொருத்தியா?
கதவைத் திறந்து
எட்டிப் பார்க்கிறேன்!

வீட்டுத் திண்ணையில் அமர்ந்தபடி
கைக்குழந்தையை மடியில் கிடத்தி
ஆகாயத்தைச் சுட்டிக்காட்டும்
அன்னையர்கள்!

வீதிகளில் கும்மாளமிடும்
விடலைப் பையன்கள்!

பிள்ளைகளின்
ஆரவாரத்தை ரசிக்கும்
பெற்றோர்கள்!

இவர்களின் சுகவாழ்வு
எனக்கோ
சூனியமாய்த் தெரிகிறது!

வெறுமை மனசைக் கவ்வ
ஆகாயத்தை
அண்ணாந்து பார்க்கிறேன்!

வானத்தில்
செயற்கை மின்னலாய்
வான வெடிகள்!

கண்சிமிட்டும் மின்மினியாய்
மத்தாப்புகள்!
ஈழத்தின்
துப்பாக்கி வேட்டுகளாய்
பட்டாசுகள்.

இன்னொரு தீபாவளியும்
வந்து விட்டது!
எனக்கு இது
தீபாவளி அல்ல; தீபா "வலி"
"தீ
இதயத்தில் பற்றிய
வலி"

தொலைக்காட்சியைத் திறக்கிறேன்
நம்பர் ஒன் நடிகைகளின்
நட்சத்திரப் பேட்டிகள்!

பத்திரிக்கையைப் புரட்டுகிறேன்!
முன்னணி நடிகைகளின்
முப்பரிமாணங்கள்!

எனக்குந்தான்
வெள்ளித்திரையுலகில்
எனக்குந்தான் ஒரு
காலம் கனிந்ததே!

நான்
திரும்பிய பக்கமெல்லாம்
மனித முகங்களைவிட
கேமரா முகங்கள்!

விவரணத்திற்கு
வீடியோ எடுப்பதைப்போல் என்
அசைவுகளையெல்லாம்
அரங்கேற்றிய புத்தகங்கள்!

என்
படத்தைப் போட்டே
பணம் சம்பாதித்த
பத்திரிகைககள்!

எனக்கு
வந்து குவிந்த
வாழ்த்து மடல்கள்!

உறக்கத்தைக் கலைக்கும்
தொலை பேசிச் சத்தங்கள்!

நான்
சுவாசித்த காற்றை
சுவாசிப்பதாய்
பெருமையடித்த ரசிகர்கள்!

எங்கே,
இவர்களெல்லாம் எங்கே?

திரை வாழ்வை விட
தரை வாழ்வு கொடுமையானது
நிழலை விட
நிஜம் ரணமானது!

தூக்கத்தில் கனவு
சுகமானது!
எனக்கு
வாழ்க்கையே கனவானது!

கனவுக் காட்சிகளில்
கலர் கலராய் ஆடை கட்டி
ரசிகர்களின் கண்களில்
மிதந்தவள் நான்!
இன்று...என்
கடந்த கால வாழ்வே - ஒரு
கனவுக் காட்சியாகிவிட்டது!

புயலுக்குப் பின்னால் - அமைதி
என்பதைப்போல்
போலிகளுக்குப் பின்னால் தெளிவு!

எவருமே
என்னை நேசிக்கவில்லை!
என்னைப் பெற்றவர்கள் கூட!

எந்த ஒரு
பரிசுக்கும்
பாராட்டிற்கும் முன்னால்
ஒரு எதிர்பார்ப்பு
இழையோடிக் கிடந்ததே!

இவள் இப்படித்தான் - என்ற
இமேஜைக் குத்தி - என்
கற்பனைப் பாத்திரத்தைக்
காதலித்தவர்கள்
இமேஜ் இழந்தபோது
கற்பனையைக்
கற்பானையாய் எண்ணி
உடைத்து விட்டார்கள்

நான்
அனுபவித்ததெல்லாம்
ஆழ்மன அமைதியல்ல!
இன்பம்!

என்னிடம் நிலவியது
நிம்மதியல்ல
சுகம்!

இந்தக் கலையுலகில்
பணத்தைப் பார்த்தேன்
புகழைப் பார்த்தேன்
சொகுசைப் பார்த்தேன்
மனிதர்களையும் பார்த்தேன்
மனித நேயத்தைத்தான்
பார்க்கவில்லை!

புயலுக்குப் பின்னே
அமைதியைப்போல்
போலிகளுக்குப் பின்னே
தெளிவு!

வெடிக்கும் வரைதான்
பட்டாசுக்கு மதிப்பு!
உதிரும் வரைதான் உதிரும்
பூவிற்கு வாழ்வு!
அணையும் வரைதான்
வானவெடிக்கு ஆரவாரம்!
திரையில்
ஜொலிக்கும் வரைதான்
நடிகைக்கு வாழ்வு!

*30-11-93*

# ஒரு ஆன்மாவின் அழுகை



நாங்கள்
சினி நட்சத்திரங்கள்
சிலருக்கு
சீனியாக
துணியவிழ்க்கும்
சினி நட்சத்திரங்கள்.

எங்கள் ஜொலிப்பு - உடலில்
வாலிப்பு இருக்கும் வரைதான்.
நாங்கள்
சுடர்விடுவது
மேக்கப் பேட்டரியால்,
எங்கள்.
ஜீவிதம் பிழைப்பது
பத்திரிக்கை தர்மத்தால்,
எங்கள்
பணப்பையின்
கணத்தை நிர்ணயிப்பது
ஆடையின் அளவு!

இத்துறைக்கு வராவிட்டால்
வக்கீலாகவோ
கலெக்டராகவோ
வந்திருப்போம்
என்பதெல்லாம்
நாங்கள் விடும் கதை.

வறுமையாற்றில்
சத்திரத்தை நோக்கித்
தத்தளிக்கும் குடும்பத்தைத்
தடுக்கவே
வெள்ளித்திரையில்
எங்கள் பெண்மைக்குக்
கொள்ளி வைக்கிறோம்.

சௌகரியங்களும்
லாபங்களும்
தன்னலங்களுமே
மனித மதிப்பீடுகளாய்
மலர்ந்துவிட்ட பூமியில்
எங்களை நாங்கள்
அடையாளம் காட்ட
அலைகிறோம்.

எங்கள்
வானத்தில் வரும்
வால் நட்சத்திரங்கள்தான் - இந்த
ஆண் நட்சத்திரங்கள்.
இருந்துமென்ன
எங்களை
மனிதப் பிறவியாகவே
இவர்கள்
மதிப்பதில்லை.

அவர்கள்
தேவைக்குப் பலியாகும்
செயற்கை கோள்களாகவே
சித்திரிக்கப் படுகிறோம்.

நாங்கள்
சினிமா கம்பெனியில்
உற்பத்தி செய்யப்படும்
செக்ஸ் பொம்மைகள்.

இதற்கு மூலதனம்
இளமை.
இந்தக் கம்பெனியில் - பலருக்குக்
கம்பெனி கொடுத்தால்தான் - இங்கே
சாலூன்றலாம்!

கதையயன்று - எங்கள்
சதையை வைத்தே
கதை பண்ணும்
கதாசிரியர்கள்
நெறியாள்கை என்று
நெறிபிறழும்
இன்றைய இயக்குநர்கள்.

நடிப்புக்கு மட்டுமன்று - சில
துடிப்புக்களுக்கும் கணக்குப்போடும்
தயாரிப்பாளர்கள்.

நட்சத்திர மகள் - ஒரு
பணம் காய்ச்சும் மரம்
என்றெண்ணும் பெற்றோர்கள்!
எங்கள் உழைப்பிலே
உட்கார்ந்து உண்ணும்
உடன் பிறப்புக்கள்.

எங்கள் நடிப்பை மட்டுமன்று
ராத்திரிகளையும்
விமர்சிக்கும்
விமர்சனங்கள்!

இப்படி,
பிறரின் உணர்ச்சிகளுக்கு
வடிகாலாய்
வடிந்து போகும் நாங்கள்
வெறும் ஜடங்கள்

உடல் + ஆன்மா = மனிதன்
என்பது
எங்களிடம் மறுக்கப்படுகின்றது.

இவர்களின் பார்வையில்
நாங்கள் வெறும்
சதைப்பிண்டங்களே!

எங்களுக்கும்
உணர்வுகள், உணர்ச்சிகள்
ஆசாபாசங்கள்
அபிலாஷைகள்
இதயம், மனம்
எல்லாம் உண்டு என்பதை
எப்படி இந்த மனித ஜீவன்கள்
மறந்து போகிறார்கள்?

காலத்தின் நிர்ப்பந்தத்தால்
கட்டப்பட்டது
எங்கள் கைகள்
ஆதலால் நாங்கள்
நடி - கைகள்.

எங்கள் நிழல்கள்
கட் அவுட்களில்!
நிஜங்களோ...
கட் அவுட் பின்னாலிருக்கும்
மூங்கில்களில்..!.

உங்கள்
கண்களுக்குத் தெரிவது
கட் அவுட் மட்டுந்தான்

சற்றுப்பின்னால் பாருங்கள்
சின்னாபின்னமாக்கப்பட்ட
மூங்கில்களில்- எங்கள்
ஆன்மாவின் அழுகைச்சத்தம்...




ஓ...
சினிமாக் காரர்களே...
நீங்கள்
சினி மாயக்காரர்கள்

பாமர ஜனங்களுக்கே
படமெடுக்கிறேன் என
ஒரு மாய உலகத்தை
சிருஷ்டித்து
எங்கள் சிந்தையை
மழுங்கச் செய்வதேன்?

மக்களின் ரசனை
மாறிவிட்டது எனப்
பேட்டி கொடுக்கும்
பெரியோரே எங்கள்
ரசனையை மாற்றியதே
நீங்களன்றோ?

உங்கள்
சுய லாபத்திற்காக
எங்களையல்லவா
அடகு வாங்குகிறீர்கள்

நாங்கள் படித்தவர்களல்லர்
பாமரர்கள்!
அதற்காக
எங்களையே பலியாக்கிக் கொள்வதா?

நாங்கள்
கண்களை அதிகம் நம்புவதால்
கனவுகளைக் கற்றுக் கொடுப்பதா?

இந்தத் தேசத்தின்
சராசரி மனிதர்கள்
சிந்திக்க மறுப்பதற்கும்
சிந்தனை இழப்பதற்கும்
"சினிமா" தான் எனச்
சளைக்காமல் சாடுவேன்!

இந்தியாவின் இதயம்
'கிராமங்கள்'
என்றார் தேசப்பிதா.
இன்று
கிராமங்களின் இதயம்
திரையரங்குகளில்.

ஒரு
டிசம்பர் மாதத்து மழை!
கூவம் நதிக்கரையின் ஒரு குடிசை
குடிலாகிப்போகிறது
வீதியில் தவிக்கிறார்கள் - அந்த
வீட்டு ஜீவன்கள்.
அந்த வீட்டின் ஆண் மகன்
கண்ணீர் வடிக்கிறான் - தன்
அபிமான நடிகனின்
கட் அவுட்
சரிந்து கிடப்பதற்கு

நடுத்தெருவில் நிற்கும்
ரசிகனின் குடும்பம்!
ஐந்து நட்சத்திர ஹோட்டலில்
கும்மாளமிடும்
உல்லாச நடிகன்!
அவனுக்காகத்
தீக்குளிக்கும் ரசிகன்!
ரத்த உறவை விட
போஸ்டர் உறவுகள்தான்
புற்று வைத்து விட்டது.
புத்தன் பிறந்த இந்தப்
புண்ணிய பூமியில்.

ஓ....
சினிமாப் புள்ளிகளே
எங்கள் சிறார்க்கு
சின்ன வயதிலேயே
சேவையுணர்வை
விதைத்து விட்டீர்கள்

பத்து வயதிற்குள்
அங்கத்தினராகி விடுகிறார்கள்
ரசிகர் மன்றங்களில்!

உங்களால்
நாங்கள்
விஞ்ஞானிகளாகின்றோம்!
மேலை நாட்டான்
மின்னைக் கண்டான்
மின்னைக் கொண்டு
மின் விசிறியைக் கண்டான்.
நாமோ
நட்சத்திரங்களைக் கண்டு
நாமே
விசிறியாகிப் போனோம்.

முதல் நாள், முதற்காட்சி
டிக்கெட் கிடைக்கவில்லை!
ரசிகன் தற்கொலை!

ஏழு ரூபாய்க்கு
மனித உயிர்கள்
இழக்கப்படுவது
இதே மண்ணில்தான்


பாலுக்குச்
சேரிக்குழந்தைகள் பரிதவிக்க - உங்கள்
படப்பேனர்களுக்கோ
பாலாபிஷேகம்!

உங்கள்
போஸ்டர் புரட்சியினால்
கொழுத்துப் போனது
நகரத்து
ஆடுமாடுகள்தான்.

நல்ல வேளை,
அந்தச் சுவர்களுக்கு உயிரில்லை.
இருந்திருப்பின் அந்தச் சுவரொட்டிகள்
எத்தனை முறைதான்
கற்பழிக்கப்படுவது.!

கலை என்று - எம்
கலாச்சாரத்தையே
கொலை செய்யும் கொலைஞர்களே
உங்களிடம் ஒரு வார்த்தை
இந்த சினிமா மீடியம் - எம்
பாமர மக்கட்கு
தீப்பந்தமாய் அல்ல,
தீபமாய் ஒளிரட்டு!.

# தமிழ்த் தாயுடன் சந்திப்பு



நான்

தாயே...!
கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்து
முன் தோன்றியவளே!
வணக்கம்!
எப்படியம்மா
தஞ்சை மாநாடு?

தமிழ்த்தாய்

வணக்கம்!
நான்
அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டவள்.
ஒரு கட்சி விவகாரத்தில் நான் ஏன்
கலந்துகொள்ள வேண்டும்?

நான்

இல்லை, தாயே!
நான் கேட்பது
எட்டாவது
உலகத் தமிழாராய்ச்சி மாநாடு.

தமிழ்த்தாய்

ஓ...
அதைத்தான்
எனக்கே
எட்டாக் கனியாக்கி விட்டார்களே!
போகின்ற போக்கைப் பார்த்தால் ...
ஒன்று புரிகிறது.
இன்னும்
கொஞ்ச நாட்களில்
இந்த நாட்டில் ஒட்டியுள்ள
என் பெயரை எடுத்துவிட்டு
தமிழறியாத ஒரு
பெண்ணின் பெயரைத்தான்
".......நாடு" என்று
நாமம் போடுவார்கள்!

நான்:-

ஆய்வரங்குகள் எல்லாம்
சரியாகத்தானே நடந்தேறியன?

தமிழ்த்தாய்:-

சரிதான். ஆனால்,
கரோஷிமாவிற்கே
அடையாள அட்டை கேட்டார்களே!

நான்:-

ஈழ அறிஞர்களைத்
திருப்பி அனுப்பியது பற்றி...?

தமிழ்த்தாய்:-

ஈழத்தின் அறிஞர்கள்கூட
இவர்களுக்கு
தீவிரவாதிகள்த்தான்!

அங்கு...
தலைவனுக்காகவோ...
நடிகனுக்காகவோ அல்ல,
மொழிக்காக,
தலைமுறைக்காக,
மண்ணுக்காக
மண் மீது மடிகிறார்கள் என்
மண்ணின் மைந்தர்கள்!
அவர்களைப்
புறக்கணித்துவிட்டு
என்னைப் போற்றுவதா?

பிள்ளைகளுக்கோ
மரண ஊர்வலம்!
பெற்றோர்களுக்கோ
அறுபதாம் கல்யாணமா?

இத்தனையும் ஏன்?
தனிநாயகத்தின் பெயரை
ஒருவனாவது
உச்சரித்தானா?

நான்:-

மாநாட்டில் நீங்கள்
கண்டு வியந்தது?

தமிழ்த்தாய்:-

நான்
கல்தோன்றி
மண்தோன்றாக் காலத்தே
முன் தோன்றியவள்தான்!
எனக்கு இந்த
மனிதப்பிறவிகள்
முனைவர் பட்டம்
கொடுத்திருக்கிறார்கள்!

"டாக்டர் தமிழ் அன்னை" என்ற
வாசகங்களைப் பார்த்து
வாயடைத்து நின்றேன்!

நான்

கவியரங்கம் கேட்டீர்களா?

தமிழ்த்தாய்:-

கவிஞர்களெல்லாம்
சுயத்தைத் தொலைத்து விட்டுச்
சுரண்டல்காரர்களுக்குப்
புராணம் பாடிய
புலம்பலைக் கேட்டு
சோதனையும் கண்டேன் - பெரும்
வேதனையும் கொண்டேன்!

நான்:-

மாநாட்டில் நீங்கள்
உணர்ந்தது?

தமிழ்த்தாய்

தங்களின் பெயர்சொல்லி,
தறிகெட்டுத் திரியட்டும்,!
என் பெயர் சொல்லியன்றோ
தங்களை வளர்க்கின்றனர்.

நான்:-

திரண்டிருந்த
மக்கள் வெள்ளத்தைக்
கண்டு உமக்குப்
பெருமைதானே?

தமிழ்த்தாய்:-

மக்கள் வரவில்லை,
கொண்டுவந்து
குவிக்கப்பட்டார்கள்.
பார்த்தேன் அவர்களின்
பரிதாபத்தை - இந்த
அரசியல்வாதிகளின்
சுய லாபத்திற்கு என்
பாமர சனங்களல்லவா
பலியாகிப்போகிறார்கள்!

நான்:-

கோபுரங்களையும்
தோரணங்களையும் கண்டு
உங்களுக்குக்
குதூகலம்தானே!

தமிழ்த்தாய்:-

அவையெல்லாம் எனக்காக
எழுப்பப்பட்டவை அல்ல! - நான்
அதற்காக வாழ்பவளும் அல்ல!

நான்:-

தமிழன் அன்றும் இன்றும்?

தமிழ்த்தாய்:-

அன்று
இமயத்தில் கொடி நாட்டினான்.
இன்று,
பிறருக்குக் கொடி தூக்குகிறான்!
அன்று,
கண்ணகிக்குச் சிலை வ்டித்தவர்கள்
இன்று
கற்பிழந்து கதறியழும் பத்மினிகள்!

அன்று
கப்பலோட்டியவர்கள்
இன்று
கப்பலில் ஏற்றப்படும் அகதிகள்!

நான்:-

தமிழ் வளருமா?

தமிழ்த்தாய்:-

நிச்சயம்!
ஒரு கிராமத்தில்
எங்காவது ஒரு மூலையில்
பெயருக்காகவோ
புகழுக்காகவோ அல்லாமல்
நாலு பேருக்கு
தமிழைச் சொல்லிக்கொடுக்கிறானே
அவனால்...!

நான்:-

இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்?

தமிழ்த்தாய்:-

தமிழகம் தவிர்த்துப்
பிற நாடுகளில்
தழைத்தோங்கும்!

நான்:-


கடைசியாகச்
சொல்ல விரும்புவது?

தமிழ்த்தாய்:-

கோடிக்கணக்கில்
மாநாடுகளுக்குச்
செலவழிப்பதைவிடக்
கிராமங்கள் தோறும்

*பள்ளிக்கூடம் நிறுவுங்கள்!*
*"எங்கும் தமிழ்,*
*எதிலும் தமிழ்" என்பது*
*வார்த்தையில் அல்ல - உங்கள்*
*வாழ்க்கையில் நிலவட்டும்!*

*(பம்மல் நாகல்கேணி தமிழ்ச் சங்கம் சனவரி 1995 இல் நடத்திய கவியரங்கில் பாடியது)*




இன்று சனிக்கிழமை
ஆபிஸ் அரைநாள்தான்
பறவைகளின் பூபாளம் கேட்டு
கண்விழிக்கிறேன்!

காலைக்கடன்களை
முடித்துவிட்டு
செய்தித்தாள்களில்
விழிகளை மேயவிடுகின்றேன்!

ஆச்சரியம் எனக்காக
அணிவகுத்து நின்றது!

பத்திரிக்கைகளில்
செய்திகளைத் தவிர
அம்மாவின் புகைப்படம்
அறவே இல்லை!

காலை
ஆகாரத்தை முடித்துவிட்டு
ஸ்கூட்டரில்
காரியாலயத்திற்குக் கிளம்புகிறேன்!

என்னாடா இது!
நேற்றுவரை
மூலைக்கு மூலை நின்ற
கட் அவுட்டுக்கள் எங்கே?
கட் அவுட்டுக்களை
நாக் அவுட் பண்ணியது யார்?

அடடே
சுவர்களெல்லாம்
சுத்தமாகத் தெரிகிறதே!
பிறந்த நாள்முதல்
பூப்பெய்துவது வரை
போஸ்ட்டர் அடித்து ஒட்டும்
கலாச்சாரம்
காணாமல் போய்விட்டதா?

இந்த
சுய விளம்பரத்திற்கு
சுருக்குப் போட்டவன் யார்?

இலவச காட்சிதரும்
நடிகைகளின்
அரை நிர்வாணப் போஸ்டர்களுக்கு
அரோகரா!

இன்னும்
கொஞ்ச தூரம் போகிறேன்!
எதிர்ப்பக்கத்திலிருந்து
இரண்டு
கார்களுக்கு இடையில்
முதலமைச்சரின் கார்!

என்னையறியாமல்
பிரேக் போடுகிறேன்
வாகனங்கள்
ஸ்தம்பிக்கின்றன.

ஆபிசுக்குப்போகும்போது
அசௌகரியம் இல்லாமல்,
ட்ராபிக் இல்லாமல்,
போலிசின் பந்தா இல்லாமல்
முதல்வர் போகின்றாரே!

ஸ்கூட்டரை
கிளப்பிக்கொண்டு விரைந்தேன்!
கூவம் வந்து விட்டது - ஆனால்
மூக்கை மூடிக்கொள்ள வேண்டிய
அவசியமில்லை!

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு
கூவத்தை எட்டிப் பார்த்தேன்!
குண்டூசியைப் போட்டால் கூட
தெளிவாகத் தெரியும் தண்ணீர்!
குளிக்கலாம் போல
தோன்றியது!

ஆபிசை அடைந்தேன்
என்ன இது? இன்று
நான்தான் லேட்,
எனக்கு முன்பு
எல்லோரும் வந்துவிட்டார்கள்!

காலை வேலை
சுறுசுறுப்பாக நடக்கிறதே!
ஒருவரும் தூங்கக் காணோம்.

எனது
சீட்டுக்குப்போகிறேன்!
தலைமைக் கிளார்க்கர்
சதாசிவத்தை
எம்.டி. திட்டுகின்றார்.
“என்னவாம்”?
பக்கத்து சீட்காரனை
விசாரித்தேன்!
பையனை
வேலையில் சேர்க்க
லஞ்சம் கொடுத்தாராம்;
எம்.டி. வாங்க மறுத்தாராம்.
ஆண்டவனே!
லஞ்சம் இல்லாத தமிழகமா?

மதிய உணவு
இடைவேளையின்போது
“இந்தியா டுடே”யை
கையிலெடுத்தேன்
நரசிம்மராவ்
சிரித்துக் கொண்டிருக்கிறார்!

வேலை முடித்து
வீடு திரும்புகிறேன்!
அதோ
அண்ணாசாலையில்
நக்மா
குடைப்பிடித்துக்கொண்டு
நடந்து போகின்றார்!

யாரும் வாயைப்
பிளக்கக் காணோம்!
ஐயா,
குஷ்புவிற்கு
கோயில் கட்டியவர்கள்தானே நாங்கள்
இங்கு ஒரு தெய்வம்
நடந்து போகிறதே பக்தர்கள் இல்லாமல்
நாங்கள் எப்போது விழித்துக்கொண்டோம்?

தேவிபாரடைஸ் தியேட்டர்!
முதல் நாள் ரிலீஸ்
பத்து ரூபாய் டிக்கெட்டை
எழுபது ரூபாய்க்கு வாங்க
அவசியம் இருக்கவில்லை!

உள்ளே சென்று உட்கார்ந்தேன்
நான் பார்ப்பது
படமா, கனவா?
இது தமிழ்ப் படம்தானா?
கதை இருக்கிறதே!
பெண்களின்
சதையை நம்பாமல்
கதையை நம்பி ஒரு
தமிழ்ப்படமா?

தமிழில் பாடல் எழுதியிருக்கிறார்கள்
நடிகைகள்
உடுத்திக்கொண்டு நடிக்கிறார்கள்.

ஒரு கிராமம்
கதாநாயகி
கற்பழிக்கப்படுகின்றாள்
கதாநாயகனுக்காக யாரும்
காத்திருக்கவில்லை
மக்களே காப்பாற்றுகின்றார்கள்!

ரசிகர்கள்
கூடம் கொளுத்தவில்லை
மலர்கள் தூவவில்லை
ஆட்டம் போடவில்லை
விசிலடிக்கவில்லை - மனம்
மகிழ்ச்சியில் நனைய
வீடு திரும்பினேன்!

தம்பி வந்து சொன்னான்
முதலமைச்சர் போன கூட்டத்தில்
எந்த அமைச்சரும்
காலில் விழவில்லையாம்!

ஓ...
இந்த எம்.எல்.ஏக்களுக்கு
மீசை முளைத்தது எப்போது?
இவர்கள்
சேலையைக் களைந்துவிட்டு
வேட்டி கட்டியது எப்போது?
தன்மானத் தமிழனும்
சட்ட சபையிலா?

இப்படியெல்லாம் நான்
கவிபாட
இந்த மண்ணில் எப்போது
பழையன கழிந்து
புதியன புகுமோ?

(பம்பல் நாகல்கேணி தமிழ்ச்சங்கம் 23-7-94 இல் நடத்திய கவியரங்கில் பாடியது)

# அண்ணா அறிஞர்





## ஒரு அவசரக் கடிதம்



அண்ணா...
இறந்தும் வாழும்
தமிழ் மன்னா!
கடற்கரைக் கல்லறையில்
கண்வளரும் தலைவனுக்குக்
கல்லூரி மாணவனின்
கண்ணீர்க் கடிதம்.

இறந்தும்
இறவாமல் வாழும்
இதய வேந்தனுக்கு
இதயம் வரையும்
கவிதை மடல்!

அண்ணா உன்தொலை தூரப்பார்வை
இங்கே
தொலைந்துவிட்டது!

உன் இலட்சியங்களை
இலட்சங்களுக்காக
விற்கும் உன்
தம்பிகள் - உன்
கனவுகளை விற்ற பணத்தில்
மாலை வாங்கி
உன் சிலைக்குச் சூட்டுகிறார்கள்!

இங்கு
கடமை
ஆளுக்கொரு அறிக்கையை
அன்றாடம் விடுவது!

கண்ணியம்
சட்டசபையில்
வேட்டியை அவிழ்ப்பது!

கட்டுப்பாடு
கேள்வி கேட்போரைத்
தூக்கி எறிவது!

அண்ணா...
உன்
கொள்கைக் கம்பத்தில்
கொடியாய் அசைந்த அந்த
மும்மொழிகள் எங்கே?
கம்பத்தையே உடைத்து,
தங்களுக்கு மேடைபோடும்
தம்பிகள் இங்கே!

நீ...
இருக்கும் வரை
அன்னை கழகத்தின்
கட்சிக் கொடியைத்
தொப்புள் கொடியாய்
நேசித்தவர்கள்
நீ இறந்த பின்
பச்சைக் கொடியாயல்லவா
கொச்சைப்படுத்திவிட்டார்கள்!

கொள்கைக் கம்பத்தின்
கொடிக்கயிறே
தூக்குக் கயிறாய்க்
கம்பத்தில் விழுந்ததே!

ஒவ்வொரு தேர்தலிலும்
ஓட்டுக் கேட்கும்போது
"அண்ணா ஆட்சி அமைப்போம்"
என்பவன் எவனுக்காவது,
"என் ஆட்சி அமைப்பேன்"
எனச்சொல்ல
தைரியம் உண்டா?

தன் ஆட்சியின்
லட்சணத்தை அறிந்தவன்
மக்களாட்சியை
எப்படி மலரவைப்பான்?

"வீடு எங்கனமோ
எங்ஙனமே நாடும்"
என்றாய்!
அதனால்தானோ இவர்கள்
நாட்டையே வீடாக்கிக்கொள்ள
நீ கட்டிய "கழக" வீட்டைக்
"கலக" வீடாக்கினார்கள்!

'பகுத்தறிவு,
புரட்சிவாதிகளின் ஆயுதம்'
என்றாய்!
இவர்களும்
புரட்சி செய்கிறார்கள்தான்
ஆயுதத்தைத் தொலைத்துவிட்டு!

உன் கனவுகளைக்
காற்றில் எழுதிவிட்டு
'ஆட்சியாளர்களின்
புகழுக்குக் காரணம்
அறிவுடைமையா
துணிவுடைமையா' எனப்
பட்டியல் போட்டு,
பட்டி மன்றம் நடத்தும் இவர்கள்
ஆயுதம் இல்லாத
புரட்சிவாதிகள்தானே!

நீ
பொதுவுடைமையைப் பேசினாலும்
கடமையைச் செய்தாய்!
இவர்களோ,
பொதுவுயைமையை யெல்லாம்
தமதுடைமையாக்கிக்
கொள்வதையே
கடமையாய்ச் செய்கிறார்கள்.

நீ, கழுத்தில் போட்டதை
இவர்கள்
கழகத்தில் போட்டார்கள்,
தொண்டனின் இதயத்தில் போட்டார்கள்!

திராவிடக் கழகத்தின்
பரிணாம வளர்ச்சியைப்
பார்த்தாயா?

நீ...
தோளில் தூக்கி வளர்த்த
சுயமரியாதைக் குழந்தையை
“காப்பாற்ற” வேண்டிக்
காலில் வீழ்கிறார்கள்!

நீ சொல்லிக்கொடுத்தது
சுய மரியாதையைத்தான்
இவர்கள் சுயத்தை விற்று,
மரியாதையை வாங்குவதால்
உடைந்து போனது ஒரு
உதய சூரியனல்லவா?

நீ...
கறுப்பையும் சிவப்பையும்
கட்சியின் நிறமாக
ஏன் வைத்தாய் என
இப்போது புரிகிறது!
‘சூரியனே’
உடைந்துபோனதால்
தமிழனுக்கு இனி என்றும்
இருண்ட காலம் என்ற
அபாயத்தை அறிவிக்கத்தானே
நீ...
கறுப்பையும் சிவப்பையும்...
கட்சியின் நிறமாக வைத்தாயோ?

நீ... குட்டையானாலும்
எவனுக்கும்
குனிந்துபோகாததால்தான்
தமிழனின் நெஞ்சத்திலே ‘அவுட்’ ஆகாமலே
ஆடிக்கொண்டிருக்கிறாய்!

ஆனால் இங்கே சிலர்
பதவியிலிருந்து
'அவுட்' ஆகாமலிருக்க
கட் அவுட் வைத்தல்லவா
தங்களை நெட்டையாக்கிகொள்கிறார்கள்.

தஞ்சைக் காவேரியில்
தண்ணீர்ப் பஞ்சம் உன்
பெயர் கொண்ட ஆட்சியோ
லஞ்சத்திடம் தஞ்சம்!

இங்கு
உண்ணா விரதமென
ஓரங்க நாடகம் போட
நிறையப் பேர் உண்டு!
நாங்கள்
க்ளைமாக்சுக்காகக்
காத்திருக்கையில் அவர்களோ
வெற்றி விழாவிற்கு
விரைந்து விட்டார்கள்!

நாங்கள்
'இதயத்தில் நாற்காலி' போட்டு
அவர்களை இருத்தி வைத்தோம்
அவர்களோ ஆளுக்கொரு நாற்காலிக்கு
அடித்துக்கொண்டார்கள்.

அரசியல் வானில்
பந்தா இல்லாத
நந்தா ஒளியே!
பாரதத்தின்
தெற்குத்திசை
செங்கதிரோனே! நாங்கள்

புறப்பட்டு விட்டோம்...
இவர்களுக்கு
ஓட்டுப் போட அல்ல!
இவர்கள் கைகளில்
திருவோடுகளைக் கொடுத்து,
தெருவோடு ஓட்டி விட!?

பம்மல் நாகல்கேணி தமிழ்ச் சங்கம்
நடத்திய அண்ணா பிறந்த நாள் விழா
கவியரங்கில் பாடியது.

(பொய்யா விளக்கு அக்டோபர் - 1994)



நீரிணைக்கு
அப்பால்

## இந்தப் பூபாளம்...

இந்தியத் தமிழர்களிடம்
ஈழத் தமிழன் பாடும்
பூபாளம்



# போர்க்களத்தில் ஒரு பூபாளம்



தம்பிக்கு
நான் இங்கு நலமுடையேன் - என்று
இக்கடிதத்தைத்
தொடங்கித் தொடர்வதை விட - நான்
இன்னும் இங்கு
"உயிரோடு உள்ளேன்" - என்று
எழுதுவதே சரி!

இந்த மடல்
உன்னை அடையும் முன் நான்
மடிந்து விடலாம்.
உயிருக்கு என்ன
உத்தரவாதமா இருக்கிறது?

எனினும் - இந்த
யுத்தம் - சில
தத்துவங்களைக்
கற்றுத்தான் தருகிறது.

ஈழத்தின்
இன்றைய நிலை எப்படி? என்று
கேட்டு எழுதியிருந்தாய்!
உனக்குத் தெரியுமா நீ
கேட்டது - ஒரு
விரிவுரைக்குரிய வினா?
அதை
எப்படியப்பா - எழுதுவது?

விடுதலை என்ற
வேள்வித் தீயில் - நாம்
வேகும்போது
கேள்விகள் என்ன - ஒரு
கேடா?

இந்த நூற்றாண்டின்
அதிசயங்கள்
இங்குதான் அரங்கேறுகின்றன.

கற்பனையை
விற்பனை மிஞ்சுகிறது

விலையேற்றத்தைக் கண்டு
சிலர் மடிகிறார்கள்.
மடிந்த சிலர் உயிர்க்கிறார்கள்.

ஒரு லிட்டர் பெட்ரோல்
ஆயிரம் ரூபாய்.
ஒரு மெழுகுவர்த்தி
ஐம்பது ரூபாய்,
ஒரு சவர்க்காரக் கட்டி
நாற்பது ரூபாய்!

ஒரு கிலோமீட்டர்
பயணத்திற்கு
ஆட்டோக்காரனிடம்
நீட்ட வேண்டியது
நூறு ரூபாய்!

வரலாற்றில்
விலையேற்றமே ஒரு
வரலாறு படைக்கிறது.

இப்போதெல்லாம்
பருவமழை இங்கு
பெய்வதே இல்லை.
அடிக்கடி
குண்டுமழை
பொழிவதால்.

குருதிச் சுற்றோட்டம்
உடம்பில் அல்ல
தெருவில் ஓடுகிறது.

பதுங்கு குழிகளில்
பதுங்கிப் பதுங்கி
உயிரும் உடலும்
வெதும்பி விட்டது.

ஒப்பாரி தான் இங்கு
தேசியக் கீதமாய்
ஒப்புவிக்கப்படுகிறது.

உனக்கு
ஞாபகமிருக்கிறதா -
சின்ன வயதிலே நாம்
கிராமத்துத் தெருவிலே
நண்பர்களோடு விளையாடிய
கிட்டிப்புள்ளும் கிளித்தட்டும்?
அந்த
ரம்மியமான நாட்கள்
எத்துணை சுகமானவை
சுதந்திரமானவை.
ஆனால்
என் குழந்தைகள் - இன்று
விளையாடக் கேட்பதெல்லாம்
வேடிக்கைத் துப்பாக்கிகள்!

வீட்டு முற்றத்திலுள்ள
மாமரத்தின் கீழ்
கயிற்றுக் கட்டிலில்
கண்மூடிக்கொண்டே
சுற்றி நின்று அழும்
சுற்றத்தை ஒருமுறை
உற்றுப்பார்த்து விட்டு
உயிரை விடத்துடிக்கும் இம்
மண்ணின் தந்தையர்கள்

இன்று
வீடற்ற நாடற்ற
அநாதைகளாய்
குண்டடிபட்டு
வீதியோரங்களில்
வீழ்ந்து கிடக்கும்
அவலங்கள்!

கடைக்குப்போன கணவன்
திரும்பி வருவது நிச்சயமில்லை என
காத்திருக்கும் மனைவிகள்!

கண்ணி வெடியின்
அதிர்ச்சியினால்
குறைப் பிரசவமாகும்
குழந்தைகள்!

பள்ளிக் கூடம் போன மகன்
உயிரோடு வருவானா
சவமாகி வருவான் எனக்
கண்ணீரில் கரையும்
அன்னையர்கள்!

ஷெல் தாக்குதலால்
சில்லாகிப் போகும் எம்
வீடுகள்!

இக் கதாப்பாத்திரங்களின்
உஷ்ணப் பெருமூச்சு
இக்கடிதத்தின்
ஒவ்வோர் எழுத்திலும்
ஒளிந்து கிடந்து சுடுவது உன்னைத்
தொடவில்லையா?

என்ன செய்வது!
அன்று இமயத்தில் கொடி நாட்டியவர்கள்தான்
இன்று
தேசக் கொடியற்ற
நாடோடிக் கூட்டங்களாய் நடமாடுகிறோம்!

அன்று
கப்பலோட்டியவர்கள்தான்
இன்று கப்பலில் ஏற்றப்படும்
அகதிகளாய் அலைகிறோம்!
அகமும் முகமும் வற்றிய
அகதிகள்.
ஆனால்
இப்போது ஒரு
உண்மையை உணர்ந்து கொண்டோம்.

பிரச்சினைக்குத் தீர்வு
பேச்சுவார்த்தையோ
ஆயுதமேற்பதோ
எதுவாகவுமிருக்கட்டும்.

கதியில் தீராத எங்கள்
கதியைக் கருவாகக் கொண்டு
காலத்தால் அழியாத
காவியங்கள் படைக்க
எத்தனித்து விட்டோம்.

தாளிலும் பேனாவிலும்
தஞ்சமடைவதால்
மனசு
அமைதி கொள்கிறது.

நாங்கள்
படும் பாட்டை
பாடு பொருளாக்கி
பாக்கள் தீட்டி
பீடுநடை போடுகிறோம்.

முன்பெல்லாம்
இந்த வாழ்க்கை
விசித்திரமாய் விளங்கியது
இப்போது
விசித்திரமே வாழ்க்கையானதால
அழத்தெரியவில்லை.

போர்க்களத்திலும்
பூபாளம் பாட
புறப்பட்டு விட்டோம்.

வேட்டொலிகள் கேட்டுக்கொண்டே
பாட்டொலிகள் எழுப்புகிறோம்.
யுத்தக்களத்திலும்
தத்துவங்கள் தேடுகிறோம்
யுத்தத்தின் சத்தங்களை
எம் கவிதைக்கு
சந்தங்களாக்குகிறோம்.

போர்க்களத்தின்
ரத்தம் தொட்டு
புதுக் கவிதை
புனைகிறோம்.

போர்க்களத்தின்
கூக்குரலைப்
பூபாளமாய்ப்
புரிந்து கொள்கிறோம்.

# செத்துப்போகும் சித்தார்த்தன் சித்தாந்தம்

சித்தார்த்தனா!
உனது
சித்தாந்தமே
இங்கு
செத்துக்கொண்டிருப்பதைக்
கொஞ்சம் பார்.

எறும்பின்
உயிரைத்தானும்
துரும்பாக எண்ணாதே!
என்றவன் நீ

ஆனால்...
இந்த மண்ணின்
இனவாதச் சந்தையிலே
மனித உயிர்களெல்லாம்
மலிந்து விட்டனவே!

# திருத்தம்

இன்று
இந்நாட்டு மக்களிடம்
ஏற்றத் தாழ்வுகளை
இல்லாமல் செய்துவிட்டு
எல்லோரும் ஓரினமே - என
எடுத்துரைக்க வேண்டிய
ஆளும் வர்க்கமே
அவனென்றும்
இவனென்றும்
அடையாளம் காட்டி
பெரும்பான்மை
சிறுபான்மை - என
பிளவுகளை ஏற்படுத்தி
இன்னல்கள் விளைவிக்கும்
இவர்கள்
அரசியல் வாதிகளா?
அல்ல அல்ல

ஜனநாயகப் போர்வையில்
நடமாடும்
சர்வாதிகாரிகள்

சமுதாய நலனுக்காய்
தன்னையே அர்ப்பணித்தேன் - என
வெறும்
மாலைக்கும் மேடைக்கும்
மகத்துவம் சூட்டி வரும்
சமுதாயத் தொண்டர்களே
முதலில்
தனனைத் திருத்துங்கள்!
சமூகம்
தானாகத் திருந்தி விடும்!

- (தொண்டன் 1986.)

# தமிழின் பொற்காலம்

பிறந்த நாட்டில்
சொந்த வீட்டில்
உழைத்த பணத்தில்
கொடுத்து வாங்கிய
உடையை உடுத்தி
விதவிதமாக
பலகாரம் செய்து
ஆடிப்பாடி கூடிச்சிரித்து
பண்டிகை நாட்களைக்
கொண்டாடி மகிழ்ந்ததொரு காலம்!

அண்டை நாட்டில்
அகதியாய் வந்து
பணயக் கைதிபோல்
பரிதவித்து
ஏழடி நிலத்தில்
கூடாரம் போட்டு
சொந்த மண்ணின்
சுகானுபவங்களை
நினைத்து நினைத்து
நெஞ்சமுருகி
கண்ணீரில் கரைவதொரு காலம்!

இவர்கள்
மேடைகளில் முழங்குவது
அஹிம்சை!
வடக்கிலும் கிழக்கிலும்
ஹிம்சை!


ஓ...
அறநெறிக்கும்
இனவெறிக்கும்
அர்த்தம் தெரியாதவர்களெல்லாம்
ஆட்சிப் பீடத்தில்!

போதி மரத்தடியில்
ஞானம் பெற்றெழுந்த
ஜோதி மாதவனே - நீ
இன்றைக்கு இங்கிருந்தால்
எங்களைப் போலவே
தங்குவதற்கு வழியின்றி
அகதி முகாமில்
தஞ்சம் புகுந்திருப்பாய்!

என்றோ ஓர் நாள் தமிழன்
ஏற்றம் பெறுவான்?
அன்று நாங்கள்
ஆனந்தக் கூத்தாடி
நன்றாய் வாழும்
நாளே எமது நற்காலம்.
அதுவே தமிழனின் பொற்காலம்!

*(1995 கிறிஸ்மஸ் விடுமுறையில்,
அணைக்கட்டு அகதி முகாமில்
பணியாற்றியப் போது எழுதியது.)*

# மலையக மாருதம்



# இந்தப் பூபாளம்...

ஆங்கில காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையின் மத்திய மலை நாட்டின் மண்ணை வளப்படுத்த தமிழக கிராமங் களிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட இந்திய வம்சாவெளியினரின் இதய நாதம்!

நூற்று எழுபது ஆண்டுகளாய் முதுகெலும்பாய் விளங்கும் தோட்டத் தொழிலாளர்களின் தனித்துவமிக்க சமூ கத்தில் புரையோடிப் போயிருக்கும் இடியும்.... மின்னலும்... வறுமையும் கொடுமையும்.... காதலும் கவிதையும்....


# ஆதவனே ஒளிவீசு

கொட்டும் மழை; குளிரும் பனி
கொளுத்துகின்ற கோடையிலும் மங்கையர்
மட்டம் வெட்டி தளிர் பறித்தும்
மட்டம் தட்டும் கூட்டத்தை
கொட்டம் அடக்க கல்வி கற்பதனை
குறியாய் கொண்ட மாணவன் நான்
'பட்டம் பெறவே' பள்ளி செல்கிறேன்
பகலவனே நீ ஒளி வீசு

நாளைய மலையக இருள் நீங்கி
நல்லொளி வீசிட வேண்டுமென
தாளை யேந்தி கவிதை யாத்து
தாகம் தணிக்க கவியெழுதும்
'ஏழைக் கவிஞன்' கவிதையினை
ஏளனஞ் செய்ய ஒளிராமல்
காலைக் கதிரினை நீ தூவி
கதிரவனே நீ ஒளி வீசு

அடுப்பங் கரையின் கைதிகளாய்
அல்லற் படும் மாந்தர்களும்
இடுப்பொடிய உழைத்து நித்தம்
இன்னலுறும் வாழ் வதனை
தடுத் தொருநல் விடுதலையை
தரணியிதே தேடித் தர
அடுக்கடுக் காய் கவி செய்திடவே
ஆதவனே நீ ஒளி வீசு.

(தினகரன் 28.03,1987)




அந்த
உழைப்பாளியின் மகன்
உயரப் பறக்கின்றான்!

"வாழ்வில் உயர்க" என்று
வாழ்த்தியோரின்
வாக்குப் பலிக்க
இது
ஒத்திகையோ?

அந்த விமானம்
தரையைப் பார்த்து
உறுமிவிட்டு
வானத்தைநோக்கிச்
சிறகடிக்கிறது

பூமியிலிருந்து
வானத்தைப் பார்த்துப்
பழக்கப்பட்ட கண்கள்
வானத்திலிருந்து
பூமியைப் பார்த்த
முதல் நாள்.

ஓ...
வானுக்கும்
பூமிக்குமிடையில்
வாழுகின்ற
அந்தக் கணங்கள்...

அந்த நிமிஷங்களில் அவன்
இவர்களைஎண்ணிக்கொண்டான்...
'ஊட்டி வளர்த்த பெற்றோர்'
'உடன் பிறப்புக்கள்'
'நேசத்துக்குரிய நண்பர்கள்' தன்
வளர்ச்சிக்கு
கிளர்ச்சியூட்டிய
மலையகச் சமுதாயம்.

பணிப் பெண்களின்
பணி மழையில்
நனையும் அவனோ
ஜன்னல் வழியே
விமானத்தின்
பணியில் உறையும் தன்
பாமர ஜனங்கள்
தெரிகிறார்களா எனப்
பார்த்துக் கொண்டான்.

ஏ.ஸி. அறையில்
உடல் குளிர்கிறது;
மனம் எரிகிறது.

என் மக்கள்
வேகுகையில்
நான்
காற்றுக்கே கண்டிஷன் போடும்
ஏ.ஸி. அறையிலா?

உள்ளே...
சிற்றுண்டிப் பரிமாறலில்
சின்னச் சின்ன
ஐஸ்கிரீம் கோப்பைகள்
வெளியே
கோப்பையில்லாமலே
அந்தரத்தில் வலம்வரும்
ஐஸ்கிரீம் மேகங்கள்...

அந்தச்
ஸ்ரீலங்கா மனிதன்
ஏர்லங்காவில்
இருந்து கொண்டே
மேகங்களுக்கு
விண்ணப்பம் விடுத்தான்.


பாஸ்போர்ட்
வீசா,
அடையாள அட்டை
எதுவுமின்றிப்
பயணம் செய்யும்
மேகங்களே!
சிங்களவன், தமிழனென்று
ஈழத்திலோ...

இந்து, முஸ்லீம் என்று
இந்தியாவிலோ
வித்தியாசம் பார்க்காமலும்
இது
பாபர் மசூதி
யாழ்ப்பாணம் - என்று
பாகுபடுத்தாமலும்
எல்லோரின் வாழ்விற்கும்
தன்னையே கரைத்து
மழையாகப் பொழியும்
சங்கீத மேகங்களே!

சுதந்திரத்தை இத்
தேசத்தவர்களுக்குச்
சொல்லிக் கொடுங்களேன்.

*(13.06.1992)*

# புதிய யாத்திராகமம்



அய்யா
நாங்கள்
தாயகம் திரும்பிய
தமிழர்கள் பேசுகிறோம்!

"ஈழத்தமிழன்" என்றவுடன்
போராளிகள் மட்டுமே எனப்
புரிந்துக் கொள்ளாதீர்கள்!

அங்கே
தேயிலைத் தோட்டங்களில்
தேசம் உயர
தேய்ந்து கொண்டிருக்கும்
“இந்திய வம்சாவளி” என்னும்
இன்னொரு பரம்பரை
அந்தப் பரம்பரையின்
அவலம் கேளுங்கள்.

ஆங்கிலேயர்
காலனித்துவக் காலத்தில் தாங்கள்
காப்பியும் தேநீரும் பருக
காடு வெட்டிப் பயிர் செய்ய
தமிழகத்துக் கிராமங்களின்
தமிழர்களைக் கூட்டமாக
கண்டிச் சீமைக்கு
கப்பலில் ஏற்றி
அழைத்துச் செல்லப்பட்ட
உழைப்பாளிகளின்

ஒப்பாரி கேளுங்கள்!
மேல்தட்டு வர்க்கம்
சுகபானம் அருந்த
கீழ்த்தட்டு வர்க்கத்தின்
குருதியைப் பிழிந்த
கொடுமையைக் கேளுங்கள்!

எங்கள் முன்னோர்கள்
வயிற்றுப் பிழைப்பிற்கு
ஈழம் வந்தவுடன்
மன்னாரிலிருந்து
கண்டிச் சீமை வரை
கால் நடையாகவே
காட்டைக் கடந்தார்களாம்!

அன்று தொடங்கியதே இந்த
புதிய யாத்திராகமத்தின்
முதல் அத்தியாயம்!

நாங்கள் வனாந்திரத்தை வளமாக்கியவர்கள்
நாங்கள்
தேயிலை மணத்தை
உலகம் முழுவதும்
உணரச் செய்து
நுகரச் செய்தவர்கள்!
நூற்றியைம்பது ஆண்டுகளாய்
தேயிலைச் செடிகளின்
வேர்களாய் வாழ்ந்தும் எங்களில்
ஐந்து இலட்சம் மக்களைத்
'தாயகம் திரும்பு' எனச்
சட்டம் போட்டது
ஸ்ரீ'மா சாஸ்த்திரி ஒப்பந்தம்'!

உழைத்து கொடுத்தவனின்
தலை விதியை
உட்கார்ந்து உண்ட
இரண்டு அரசுகள்
உடன்படிக்கை செய்தன.

இரத்தத்தை உறிஞ்சி விட்டு
எறும்புக் கூடுகளை
இந்தியாவிற்கு
ஏற்றுமதி செய்தது
இலங்கை அரசு!

இலங்கையின் தலையெழுத்தைச்
சரிசெய்தது நாங்கள்.
எங்களின் தலையெழுத்தை
இன்னொருவன் அல்லவா
எழுதி வைத்தான்!?

ஒன்றரை நூற்றாண்டாய்
உண்டு குடித்து
ஒன்றாய் வாழ்ந்த இனம்
உயிரோடு பிரிய
உணர்வுகள் எரிய
மலையகத்திலிருந்து மன்னார் வரை
ரயிலிலும்
மன்னாரிலிருந்து மண்டபம் வரை
கப்பலிலும்
கடல் கடந்து வந்தோம்!

இந்த
புதிய யாத்திராகமத்தின்
இன்னுமொரு அத்தியாயம்
இப்படித்தான் அரங்கேறியது.

பூர்வீக நாடுதானே எனப்
புறப்பட்டு வந்தோம்
வந்தவுடன் மறுபடியும்
வெந்து போனோம்.


இங்கு
சாதிக்கொரு தெருவைத்து
மோதிக் கொள்ளுகிற
சங்கடத்தில் அகப்பட்டோம்.

இந்தியர்கள் என்று
ஏற்றுக்கொள்வார்கள் என
எண்ணியன்றோ நாங்கள் வந்தோம்.
இன்றோ!...இன்னும்
அன்னியர்களாகவே
அழைக்கப்படுகின்றோம்

அய்யா
போதும் எங்கள் புலம்பல்!

ஈழத்தில் வாழ்ந்த எங்கள்
எச்சங்கள்
அடிப்பட்டு அகதியாய்
கடல் கடந்த இந்த
புதிய யாத்திராகமத்தின்
அடுத்த அத்தியாயத்தை
அடுத்து வரும்
அகதி ஆகமத்தில்
அறிந்து கொள்ளுங்கள்

# அகதி ஆகமம்



எங்களில் சிலர்
இந்தியா போய்விட
எஞ்சியிருந்த நாங்கள்
ஓட்டுரிமை கேட்டு மலைத்
தோட்டங்களில் வாழ்ந்தோம்.

ஆண்டுக் கொருமுறை
ஆகஸ்ட் மாதங்களில்
கட்டவிழ்ந்த வன்முறையால்
மட்டம் தட்டப்பட்டோம்.

தேயிலைச் செடிகளை
காவல் காத்த நாங்கள்
கலவரங்களில்
தேயிலைச் செடிகளாளேயே
காவல் காக்கப்பட்டோம்.

மரத்திற்குள்ள நன்றியுணர்வு அந்த
மண்ணின் பேரினவாத
மனிதர்களுக்கில்லையே!

ஆண்டுக்கொருமுறை
அலைக்கழிக்கப்பட்டதால்
மன்னாரிலும் வவுனியாவிலும்
மறுவாழ்வு தேடினோம்.

அங்கே
சொந்த வீடு கட்டி
சுகமாக வாழ்க்கையில்
எண்பது மூன்றில்
இராணுவத் தாக்குதல்..

மறுபடியும்
எங்கள் முன்னோர்கல்
வந்த வழி எவ்வழியோ
அந்த வழியே
அகதிகள் பட்டத்துடன் தமிழ்நாட்டில்
அடைக்கலம் தேடினோம்.

அய்யா,
இஸ்ராயேல் மக்கள்
செங்கடலைக் கடந்தபோது
மோயீசன் துணையிருந்தார்!
எங்களுக்கு...?
அய்யா!
ஐ.நா.அவையில் தமிழனுக்குத்
தனிக்கொடி பறக்கலாம் ஆனால்
இந்திய வம்சாவளியின்
எதிர்காலம்...?

(1984 கோடை விடுமுறையில், தாயகம் திரும்பிய தமிழர்களிடம் பணியாற்றியப் போது எழுதியது).

# இசைபாடும் தேயிலைகள்

பச்சை நிறத் தேயிலைகள்
பசுமை கொண்ட மலையகத்தில்
இச்சையுடன் தென்றலோடு
இயைந்து இசை பாடிடுமே
கொச்சை மொழி பேசுகின்ற
கொங்கு நிலப் பெண்களெல்லாம்
மெச்சிட நன்முறை யினிலே
மெல்ல நடை போடுகிறோம்!

காலையிலே விழித் தெழுந்து
காடுமலை யேறி யங்கு
கதிரவனைத் தொழுது விட்டுக்
கரங்கள் தனைத் தேயிலையில்
வைத்தவுடன் பனித் துளிகள்
மணிகளைப் போற் பளபளக்கும்
கான்களிலே நீர் செல்லும்
காட்சியுமே அம்மம்மா!

ஆயுதங்கள் கைக்கொண்டு
அடுக்கடுக் காய்ச்செல் லுகின்ற
ஆண்குலத்தின் ஊர் வலத்தில்
ஆண்டவனே மெய்ம் மறப்போம்
அடிமை இருள் நீங்கிடவே
அருள் பொழிய வேண்டுமென
அம்மனே உன் பாதம்
அருள் வேண்டித் தொழுகின்றோம்!

*(சிந்தாமணி 05.01.1986)*

# கொய்வதும் ஒரு கோலம்தான்

பனி படர்ந்த மேட்டினிலே
பகல வனின் பிரவேசம்
பிணி நீங்கி வாழ்ந்திடவே
பிரகாச ஒளி வீச
கனி நல்கும் மரங்களெல்லாம்
காற்றினிலே அசைந் தாட
துணிவோடு துயில் நீங்கித்
தூர மலை நடக்கின்றோம்!

ஆலை யினில் சங்கொலிகள்
ஆவேச மாய் ஒலிக்க
மலையேறித் தளிர் பறிக்கும்
மாதர் களும் கூடையினைத்
தலை மேலே தான் போட்டு
தளிர் நடையைப் பயில்வதுவும்
காலையிது தானென்று!
கவிதையினில் நவிலு கின்றேன்.

நிரை நிரையாய்த் தேயிலைகள்
நித்தியமாய் செழித் திருக்க
பிறை நெற்றிப் பெண்களெல்லாம்
பிஞ்சுத் துளிர்க் கரங்களினால்
முறையாக அடி வைத்து
முந்தானை சரி யாமல்
குறை யின்றி நிறைவாகக்
கொய்வதும் ஓர் கோலம்தான்!

*(சிந்தாமணி 02.09.1986)*

# விடியலில் உதிக்கும் ஆதவனாய்

**வா**ழ்வு வளம்பெறும் என்றால்
வலிமை குன்றலாமா? நீ
நாளும் அடிமையாய் வாழ்ந்து வாழ்ந்து
நலிந்து போகலாமா?

உழைத்து உழைத்து உருக்குலைந்தே
ஊமை யாகலாமா? நீ
தழைத்து உரிமைகள் பெற்றிட விரும்பின்
தயங்கி வாழலாமா?

மலையகம் மலர்ச்சி காணவேண்டின்
மௌன மாகலாமா? நீ
கலையக மாக்கிட வேண்டும் என்னில்
கவலை கொள்ளலாமா?

அதிகாரம்பல உண்டெனவெண்ணி
அடிமையாகலாமா? நீ
விதியிது எமது கதியிது என்றே
வீழ்ந்து கிடக்கலாமா?

துன்பம் உன்னைத் துரத்தினாலும்
துணிவை இழக்கலாமா? உனை
இன்பம் ஓர்நாள் நாடுமுன் பிறர்
இகழ வாழலாமா?

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
நித்தம் உழைக்கும் வீரா! நீ
வெற்றிப் பாதையில் வீறு கொண்டெழுவாய்
விடியலில் உதிக்கும் ஆதவன் ஆவாய்!

(சிந்தாமணி 10.08.1986)

# ஒரு சுமைதாங்கியின் சரிதை



சுமை சுமந்து
சோர்ந்திருப்போரே இதோ
ஒரு சுமை தாங்கியின்
துயரம் கேளுங்கள்!

இவள்
சுமப்பதிலேயே
சுகங்கண்டவள்!

ஐந்து வயதில்
தோட்டத்து லயத்தில்
இவளின்
தம்பியைச் சுமந்தவள்!

எட்டு வயதில்தான்
பாலர் பாட
புத்தகங்கள் சுமந்தாள்!

பத்து வயதிற்குள்
படிப்பிற்கு
முடிச்சுப் போட்டு
தேயிலை மலைக்குத்
தேநீரைச் சுமந்தாள்!

பதினைந்து வயதில்
அலுவலகம் பதிவேட்டில்
அறிமுகமாகியதோடு
கொழுந்துக் கூடையைச்
சுமந்தாள்!

பதினெட்டு வயதில்
பெற்றவர்கள் நிச்சயித்த
பலாத்கார கலியாணத்திற்குப்
பலியாகி
தாலியைச் சுமந்தாள்.

ஆண்டுக்கு ஒன்றென
அடுத்தடுத்து
ஆறு குழந்தைகளைச்
சுமந்தாள்!

முப்பது வயதிற்குள்
முடி நரைத்துவிட,
தேயிலை மலைகளில்
வலம் வந்த கால்களில்
பக்கவாதம் வந்துவிட
படுக்கையில் கிடந்தாள்!

நாற்பது வயதிற்குள்
நரைக் கிழவியாகி
நாவிலப்பிட்டி ஆஸ்பத்திரியில்
ஆவி பரிந்துவிட....

இந்தச்
சுமைதாங்கியைச்
சுமந்து வர
லாரி கொடுக்க
மறுத்து விட்டது
தோட்டத்து நிர்வாகம்!

இவள்
பிறந்து வளர்ந்து
உழைத்து உருக்குலைந்து
செருப்பாய்த் தேய்ந்த
தோட்டத்து மண்ணிலே
புதைத்து விட நாங்கள்
பாடையில் சுமக்கிறோம்!

இவள்
பிறந்தது எட்டடி வீடு
வளர்ந்தது எட்டடி வீடு
மலர்ந்தது எட்டடி வீடு
மணந்தது எட்டடி வீடு
புணர்ந்தது எட்டடி வீடு
பிள்ளைப் பேறு கண்டது எட்டடி வீடு
பேரப் பிள்ளைகளைப் பார்த்ததும் எட்டடி வீடு,

மீட்ட வேண்டிய விரல்கள்
கொழுந்து கொய்தன!
பரதம்
பயில வேண்டிய
பாதங்கள்
மலை முகடுகளில்
அலைந்தன!

கீதம்
இசைக்க வேண்டிய நாவு
வெற்றிலை மென்றது!
ஆகாயத்தை அண்ணாந்து
நீல வானத்தை
ரசிக்க வேண்டிய
நீள் விழிகள்
பச்சைத் தேயிலையைப் பார்த்து
நிறங்களை மறந்தன!

சங்கீதம்
கேட்க வேண்டிய செவிகள்
சங்குச் சத்தத்தையும்
பிரட்டுத் தப்பையும்
கணக்கப்பிள்ளை, கங்காணிகள்
திட்டலையும் கேட்டுக்கேட்டு
செவிடாகின!

பட்டுச்சேலை கட்டவேண்டிய
பட்டுடல்
படங்கையும் சீட்டையும்
கட்டிக் கட்டிப்
பட்டுப் போனது!

பல்கலைக்கழகங்களில்
ஆய்வு செய்யவேண்டிய
மூளையோ
பீளிக்கரை,
பிள்ளை மடுவம்,
மலை முகடுகள்,
மறுநாள் வேலை என
யோசித்து யோசித்து
வறண்டு போனது!

இவள்
ஜனனத்தில்
எப்படி இருந்தாள்?
குண்டாக...அழகாக
மூக்கும் முழியுமாக!
இவையனைத்தும் இவள்
பிறப்பிலே கொண்டுவந்த
சீதனங்கள்!
இறப்பிலே இவளிடம்
எஞ்சியதெல்லாம்
சூம்பிய கைகள்
குழி விழுந்த கன்னங்கள்
இருள் படிந்த கண்கள்

நாகரிகம்
இன்னொரு கிரகத்தின்
உச்சியைத் தொடும்
நவயுகத்தில் இவள்
நகங்களையே
வெட்ட மறந்தாள்!

விஞ்ஞானம்
பூமியின் பரப்பை
விஸ்தரிக்க யோசிக்கையில்
இவள்
ஐந்நூறு ஏக்கர்
தேயிலைத் தோட்டமே
அகிலம் எனக் கண்டாள்

சூரிய ஒளியில்
சோழா சக்தி
தயாரிக்கப்படுகையில் இவள்
குப்பி விளக்கிற்கு
மண்ணெண்ணெய் தேடினாள்.

மனித குலம்
ஒன்றே எனின்
ஏனிந்த ஏற்றத்தாழ்வு?

மதங்கள்
வெவ்வேறாயினும்
தத்துவங்கள் ஒன்றுதானெனின்
மனித மார்க்கத்தில்
ஏனிந்த வர்க்கப்பேதம்?!

பொழுது
எல்லோருக்கும்
ஒன்றாகத்தான்
புலர்கிறதெனில்...
ஏனிந்த
பொருளாதாரப் பாகுபாடு?!

கொண்டு வாருங்கள்
தேசக் கொடியை
போர்த்தி விடுங்கள் இவள்
போதியுடலில்!

இந்த
உடலும் உயிரும்தானே
எனக்கு
ஞானத்தைக்
கற்றுத் தந்தது!

அனுஷ்டியுங்கள்
அடையாள மௌனத்தை!
அறிவியுங்கள்
துக்க தினமென்று!

பறக்க விடுங்கள்
அரைக் கம்பத்தில்
வெள்ளைக் கொடிகளை!
அந்தப்
போதியுடல்
புதைகுழி நோக்கிப்
போகிறது

பூமாரி பொழியுங்கள்!
தீர்த்து விடுங்கள்
மரியாதை வேட்டுக்களை

அமைச்சர்களுக்கும்
அரசியல்வாதிகளுக்குத்தான்
மரியாதை அணி வகுப்புக்களும்
மரியாதை வேட்டுக்களுமா?

இந்தத்
தியாக மகள் - ஈழத்
தேசத்தைச் செதுக்க
தன்னையே
சிதைத்துக் கொண்டாள்!

இவள்
மலையேறி
தளிர் பறித்திராவிட்டால்
முதலாளிகளே முதலைகளே
நீங்கள்
கோபுர வீடுகளில்
குடியிருக்க முடியாது?

தேசம்
வருமானம் பெற
செங்குருதி சிந்தியவள்!

வாழ்வு மறுக்கப்பட்ட
வேதனை வடிவமவள்
சிந்திக்க மறந்த
உழைப்பின்
சிகரமவள்!

பாடை
இடுகாட்டை எய்திவிட்டது!
மூடி விடுங்கள் புதைகுழியை
இந்தப் புனிதையைப்
புதைக்க வேண்டாம்
எரித்து விடுவோம்!

அதன் சாம்பலை
கழனியலும் மாவலியிலும்
கரைத்து விடுவோம்
தேசத் தலைவர்கள்
அதில் குளித்து
புண்ணியம் பெறட்டும்!

---

பிறட்டுத் தப்பு-மலைநட்டில்
அடிக்கப்பட்ட பறை
களனி, மாவலி - இலங்கையில் பிரசித்தி
பெற்ற இரண்டு ஆறுகள்.

# குறைதான் என்ன?

உழைத்த பரம்பரை தழைத்து ஒருமுறை
உரிமை கேட்பதில் என்ன குறை உடல்
இளைத்துத் தேய உழைக்கும் வர்க்கம்
எழுச்சி பெறுவதில் என்ன குறை?

காட்டை யழித்து நாட்டை யாக்கிக்
கழனி செய்வதில் என்ன குறை?
வீட்டைப் பெருக்கி விளக்கை யேற்றி
விழுப்பம் அடைவதில் என்ன குறை?

அடிமை வாழ்வின் இருளை யகற்றி
அல்லல் தீர்ப்பதில் என்ன குறை?
படித்து நாமும் பட்டம் பெறவே
பள்ளி செல்வதில் என்ன குறை?

கோழைத் தனத்தை யொழித்தே நாமும்
கோஷ மிடுவதில் என்ன குறை?
காலைக் கதிரவன் போலே யெழுந்து
கடமையைச் செய்வதில் என்ன குறை?

புதுயுகம் படைத்து நவயுகம் காணப்
பொதுநலம் புரிவதில் என்ன குறை?
மதியுடன் வாழ்ந்து மலையக அன்னையின்
மைந்தர்க ளென்பதில் என்ன குறை?

கடமையைச் செய்து திடமுடன் வாழ்ந்து
கவலை யொழிப்பதில் என்ன குறை?
மடமையை யழித்து மலையகம் சிறந்து
மலர்ச்சி யடைவதில் என்ன குறை?

*(சிந்தாமணி சனவரி 1987)*

# கவிஞருக்குக் கருவானாய்

கூட்டிளங் காதலியே! உந்தன்
கரம்பட்ட தேயிலைகள்
மொட்டவிழ்ந்த தாமரையாய்
முகங்கண்டு சிரிக்குதடி!

சங்கின் ஒலிகேட்டு
தளிராயக் கூடையுடன்
கங்குலும் நீங்கிவிடக்
காரிகையே வந்தாயோ?

காலைச் சூரியனும் ஒளிக்
கதிர்களைத் தூவிவிட
சாலை வழியாய் நீ
தளிராய நடக்கின்றாய்!

மலையருவி உனைக்கண்டு
மகிழ்வோடு ஓடிவர
வளைக்கரம் நீயெடுத்து
வகையாகக் கொய்ததனால்...

பிஞ்சுக்கரம் பட்டந்த
பச்சிளந் தேயிலைகள்
மஞ்சுக்குழல் தேவியிடம்
மயங்கி விட்டனவாம்!

சிவந்த இதழ்விரித்துச்
சிரிக்கும் போதெல்லாம்
கவர்ந்து இழுக்கின்றாய்
காதல் போதையிலே!

(சிந்தாமணி நவம்பர் 1986)



(குறுங்காவியம்)

## 1. காலைக்காட்சி

<u>ஊ</u>...ஊ....ஊ....

வைகறையின் வசந்தத்தை
வரவேற்கிறது - அந்த
ஐந்து மணிச் சங்கு.

அசதி அணைத்துக்கொண்ட
ராத்திரிக்கு விடை கூறி
காலையை வரவேற்க
கண்விழித்தெழுகிறாள்
தொங்க வீட்டுக் காமாட்சி

---

தொங்க வீடு - மூலை வீடு

அடுப்பில்
சாம்பல் அள்ளும் - அந்த
ஆம்பல்
இடுப்பை வளைத்து
அடுப்பை மூட்டி
பல் துலக்கி பாத்திரம் கழுவி
சுடுநீர் வைத்து
துயிலெழுப்புகிறாள்
கணவன் கருப்பண்ணச்சாமியை!

மூலைக்கொரு ஆளாய்
முடங்கிக் கிடக்கும்
அவள் வயிற்றுத் தாமரைகள்
காமாட்சியின் கந்தல் சீலைப்
போர்வைக்குள் புதைந்து விடுகிறார்கள்!

கருப்பட்டியோடு காட்டம் குடித்த
கருப்பண்ணச்சாமி - பனி
மூட்டம் விலக்கி
பிரட்டுக்களம் நோக்கி
பீடு நடைபோடுகிறான்!

யுத்தக்களம் செல்லும்
வீரனைப்போல்
பிரட்டுக்களம் வரும்
பிச்சை முத்து!

உதடுகளில் உடரெட்மெனிக்கேயை
ஊதிக்கொண்டே
புகைவண்டி பொன்னையா!

---

காட்டம் - சீனி, பால் கலக்காத தேனீர்
உடரெட்ட மெணிக்கே - கொழும்பிலிருந்து
பதுளைச் செல்லும் ரயில்

சின்னத்துரைக்கு
பகலிலேயே பந்தம் பிடிக்கும்
பக்கத்து வீட்டுப் பழனி!

இந்தப் பாட்டாளிகள்
விடியலிலே கூட்டமாக வேலை பெறும்
பொட்டல் வெளிதான்
பிரட்டுக்களம்.

பெரிய கணக்கப்பிள்ளை
பீதாம்பரம் - ஒரு
பிரதமர் பெருமையோடு
பிரித்துக் கொடுக்கிறார்
வேலையை!

நீ காணுவெட்டு
நீ முள்ளுக்குத்து
நீ கவ்வாத்து
நீ ஓரம் போட...

.பந்தங்களும் லஞ்சங்களும்
சூப்பர்வைசர் இல்லாத
சுதி வேலை பெற்றுக்கொள்ள - அந்த
ஊமை உழைப்பாளிகள்
காலைக் கடன் கழிக்க
கலைகிறார்கள்.

---

பந்தம் - வத்தி வைத்தல்
கவ்வாத்து - தேயிலைச் செடிகளின்
கிளையை வெட்டும்வேலை
சுதி - இலகுவான வேலை

வீட்டில்...
பழக்கமாய்ப்பாடும் பல்லவியாய் காமாட்சி
ரொட்டி சுட்டு, சம்பலரைத்து பிள்ளைகளைத்
தட்டித்துயில் நீக்கி
தலைவாரிப் பொட்டுமிட்டு
தொட்டியில் துயிலும் சின்னக்குழந்தையைக்
கட்டி முத்தமிட்டு கனியிதழில் பாலூட்டி
உண்டு குடித்து
உற்றவனுக்கும் கொடுத்தும் மக்களைப்
பள்ளிக்கூடம் அனுப்ப
ஒலித்தது மலை உச்சியில்
ஏழு மணிச் சங்கு!

ஏழாம் நம்பர் மலைக்கு
ஏந்திழையாள் போகவேண்டும்.
ஐந்தாம் நம்பர் மலையில்
அன்பனுக்குக் காணுவெட்டு.

இடுப்பில் ஒரு படங்கை கட்டி
தலையில் ஒரு துண்டைப் போட்டு
கூடையை மாட்டிக்கொண்டு
பிள்ளை மடுவத்தில் அந்தத்
கிள்ளையை விடத் தூங்கும்போது
"தொங்கவூடு..." என்று
தூரத்தில் கத்தினாள்
பணியலயித்துப் பார்வதி!

---

சம்பல் - துவையல்
படங்கு - றபர்சீட்
பிள்ளை மடுவம் - பிள்ளை பராமரிப்பு
நிலையம்
லயம் - வரிசையாக கட்டப்பட்டுள்ள
தொழிளாலர்களின் வீடுகள்

சின்னவனைக் கக்கத்தில் வைத்து
சிற்றிடை அசைத்து
வெற்றிலைக்குப் பாக்கு
வேலம்மாவிடம் வாங்கி
பக்கத்து லயித்து சமாச்சாரங்களைப்
பார்வதியுடன் பேசிக்கொண்டே
குழந்தை மடுவம் சென்று அந்தக்
குட்டிப்பலைய விடும்போது
“எம்மா, நானும் ஒன்னோட
மலைக்கு வாரேன்” என்று
கத்தினான் கடைக்குட்டி!

கெஞ்சிக் கூத்தாடிக் கொஞ்சியழும் அந்த
வஞ்சிமகனை
வாஞ்சியுடன் நோக்கும்
ஆயாவிடம் திணித்து விட்டு
குறுக்குப் பாதையில் ஒயிலாக
ஓட்டமும் நடையுமாக அந்த
மயிலாள் மலையை அடைந்தபோது
மணி ஏழு இருபது!

ஐந்து நிமிஷம்தான் சுணக்கம்; அதற்காக
வீட்டிற்கு விரட்டுகிறார் கங்காணி!

உச்சரிக்க முடியாத
ஒழுக்க வார்த்தைகளை உமிழ
காதைப் பொத்திக் கொண்டு
கங்காணிக்குப் பயந்தவளாய்
பாசாங்கு காட்டி நின்றாள் பாவை!

ஐந்து நிமிஷ சுணத்திற்கு
பத்து நிமிஷம் திட்டி
பதினைந்தாவது நிமிஷத்தில்
மலையேறச் சொல்ல
'விரட்டப்படவில்லை' என்ற
வீராப்போடு நிரைபிடித்து
குறையில்லாமல் கொழுந்து கிள்ளுகிறாள்
அந்தக் கோதை!

அன்று
பாட்டன் பூட்டன் நாட்டிவைத்தான்
நிரை நிரையாக அந்த
நிரை வழியே நாம் புகுந்தோம்
வரி வரியாக
இரு கரங்கள் தொட்டு நாம் பறிப்போம்
இதழ் இதழாக... அதை
கூடைதனில் கொண்டு செல்வோம்
அணி அணியாக... என்று
கூவத்தொடங்கியது குயிலாள் உள்ளம்.

கணவனின் மலையில்...
உரம் போடப்போன கருப்பண்ணச்சாமி
திறமுடன் ஒருமூடை
தீரமுடன் தோளில் ஏந்தி
விரைவாகச் சென்று வீரமுடன் வீச
முரட்டுச் சின்னத்துரை
மோட்டார் சைக்கிளில் வந்து நின்றான்!
சனாதிபதிக்குரிய மரியாதையோடு மற்றவர்கள்
சலாம் போட
வந்த சின்னத்துரை
வாய் கிழியக் கத்தினான்...

அந்தக்
காட்சியைக்கண்ட
கருப்பண்ணச்சாமியின் மனதில் ஒரு
பாடல் ஊறியது.

“தோட்டக்காட்டு வேலையின்னா
தூசிப்போலவா?
தூரத்திலே நின்னு பார்த்தால்
பூச்சிப் போலவா?
ஒரு மூடை உரம் ஒனக்குத்
தூக்க முடியுமா?
மலையேறி காணுவெட்ட
ஒன்னால் முடியுமா?”

சின்னத்துரையை
விழிகளாலேயே வினவினான்
“சப்பாத்து, தொப்பி வச்சுனுக்கிட்டா
சாமியின்னு பார்க்கிறியா?
குப்பாடி பசங்க தொப்பிய வச்சி
கும்மாளம் போடலியா?

மலையகம் என்னும் கலையகத்தின்
காலைக் காட்சி இடைவேளை!

பிள்ளைத் தாய்ச்சிப் பெண்கள்
பிள்ளை மடுவத்து மழலைக்கு
பாலூட்டி தூங்கவைத்து
பாட்டியிடம் கொடுத்துவிட்டு
தண்ணி சுடவைத்து
தாங்களும் குடித்துவிட்டு மீண்டும்
தளிராய பறக்கிறார்கள் தளிர்கள்!

காமாட்சியோ
பக்கத்து வீட்டு குமரிகட்கும்
முக்கால் போத்தலில் தேனீரும்
மூனு துண்டு ரொட்டியும்
சுற்றித் தூக்கிக்கொண்டு
முக்காடு போட்டு, தாமதித்தால் கங்காணி
முரண்டு பிடிப்பானோ எனத்
தேக்காடு நோக்கித்
தேராக ஓடுகிறாள் தேயிலை தேவதை!

கணவனின் மலையில்...
பத்தரை மணிக்கு வெட்டிய புல்லில்
பாய் விரித்துப் பந்தியமர்ந்து
சாப்பிட்டு தாகம் தீர்த்து
சித்திரை மாதத்து வெயிலின் வியர்வை
தேகமெல்லாம் தான் வடிய
இத்தரையில் நாம் தான்
இணையற்ற தொழிலாளிகள் என்ற
தத்துவம் பேசி
மரம் தரும் நிழலில்
மனம் சுகம் காண
சோர்வடையும் உடம்பிற்கு
ஆர்வம் ஊட்டி
மாறாப்புக் காணுக்குள் நுழைந்து
தானே உரம் என்று தன்னையறியாமல்
சகாக்கள் சகிதம்
உரமிட்டுச் செல்கிறான்
காமாட்சியின் கணவன் கருப்பண்ணச்சாமி!

---

போத்தல் - Bottle
மாறாப்பக் காண் - வடிகால்

# 2. பகல் காட்சி

ஊ... ஊ... ஊ...
பனிரெண்டு மணிச்சங்கு
பத்தாம் நம்பர் மலையிலிருந்து ஊதப்பட
அங்கே தளிராய்ந்த ஆரணங்குகள்
புகையிரத பெட்டியைப்போல்
முச்சந்தியில் ஒன்றிணைய
கப்பல் மாலுமியின் கம்பீரத்தோடு
கங்காணி முன் செல்ல

சிக்குப்புக்கு நீலகிரி தொப்பித் தோட்டம்
நாங்க போறக் கப்பலுல மிச்சங்கூட்டம்
என்று அந்த
உழைப்பாளிப் பெண்கள்
ஓட்டமும் நடையுமாக
கொழுந்து மடுவம் போக
கொடியசைத்தார்கள்!

கொழுந்தை நிறுத்திவிட்டு
கூட்டுக்கு வரும் கோமகள்
பள்ளிக்கூடம் விட்டு
பாதி வழியில் வரும் பைங்கிளியை
உச்சிமோர்ந்து தோளில் தூக்கி
கச்சித சிரிப்பில் கதை நூறு கேட்டு
பிள்ளை மடுவத்தின்
வாசலில் தவமிருக்கும்
வாண்டையும் வாரியணைத்து
வீட்டிற்கு படையோடு வருகிறாள்
வேந்தன் மனைவி!

---

புகையிரதம் - ரயில்
கங்காணி - வேலை ஒழுங்கு பார்ப்பவர்

பழையசாதத்தையும் குழம்பையும் சூடாக்கி
தொட்டுக்க துவயலரைத்து
குழந்தைக்குக் கதை சொல்லிச் சோறூட்டி
மழலையின் தந்தைக்குப் பீங்கானில் சோறிட்டு
பாத்திரத்தில் மூடி வைத்து
அன்னத்தை அந்த அன்னம்
அள்ளி விழுங்கி
சின்ன நிலாவைப் பார்த்துக் கொள்ள
சின்னமகளுக்குச் சொல்லி
அடுத்த காட்சிக்கு
குறிஞ்சி நிலப் பெண்களோடு
கூடியோடுகிறாள் அந்தக்
குறிஞ்சிக் குறமகள்!

வேலை முடித்து வீடு வரும்
சிறுத்தை கருப்பண்ணச்சாமி
காட்டாற்றில் கழுவி
அளவோடு அரட்டையடித்து
யானைப் பசியோடும் தலையில்
தூணாய் விறகுக்கட்டோடும்
வீடு வருகிறான் விரைந்து!

பழைய சோற்றைத் துவயலோடு
வயிற்றுக்குள் அனுப்பியதும்
உறக்கம் தழுவ
தழுவிய தூக்கத்தைத் தவிர்த்து
அரிவாள் சாக்கோடு
மாட்டுக்கு புல்லறுக்கப்
புறப்பட்டுப் போனான் அந்தப்
பூமியின் புதல்வன்!

---

பீங்கான் - தட்டு

# 3. மாலைக்காட்சி

<u>ஊ</u>...ஊ...ஊ...
அந்தியை வரவேற்று
ஆரவாரிக்கிறது அந்த
நாலுமணிச் சங்கு!

சங்குச் சத்தம் கேட்டு
நங்கையர் கூட்டம் சில
அங்குல இடைவெளியில்
அழகாக ஒன்றிணைந்து
தங்களுள் கதைபேசி
தாம் கொய்த தளிர்களைக்
கங்குல் படரும் முன்
கதிரவன் மறையும் முன்
நிறுத்துப் பார்ப்பதற்கு
நீண்ட வரிசையாய்
நடந்து போகிறார்
நம்குலப் பெண்மணிகள்!

ஆறு மணிச் செய்தியை
வானொலி வாசிக்க
வீறு கொண்ட கணவன்
வீடு வந்து சேர
சோறுகறி சமைக்கும்
சுந்தர மலைமகள்
கணவனுக்குத் தேநீர்
காய்ச்சிக் கொடுத்தாள்.

இருள் கொஞ்சம் கவ்வ
இதமாக விளக்கேற்றி
அருள் வேண்டி அம்மன் முன்
அமைதியாய் நின்று
ஒருமுறை ஓர் நாளைக்கு
உருக்கமாய் வேண்டுகிறாள்
பரல்களில் அலைந்த பைங்கிளி.

பெற்ற குழந்தைகட்கு
பிரியமுடன் சோறூட்டி
கற்ற தாலாட்டைக்
கண்ணுறங்கப் பாடி
உற்ற மழலைகள்
உறங்கியதைக் கண்டு
உள் வீட்டு மூலையில்
உறங்கப் போட்டாள் உழைப்பாளி!

கட்டிலில் கண்ணயர்ந்த
காளையை எழுப்பி
குட்டிப் பயலின்
குறும்புகள் சொல்லி
கண்ணான கணவனுக்குக்
கதை பேசிப் பரிமாறி
பெண்ணவள் தானும் உண்டு
பெருக்கி முடித்தாள்
சமையல் கட்டை!

## 4. இரவுக்காட்சி.

மற்றொரு மூலையில்
மற்றொரு பாய் விரித்து
ஒற்றைத் தலையணையில் தலைவனை
உறங்கச் சொல்லி
தானும் அமர
தள்ளி அமர்கையில்
சட்டென்று பிடித்திழுத்து அவளில்
சங்கமம் தேட
அவளையும், விளக்கையும்
அணைத்தான் கணவன்!

போலி நாகரிகமற்ற வேறு
பொழுது போக்கும் அற்ற அந்த
குறிஞ்சி நிலத் தம்பதிகளின்
வார்த்தைக்குச் சிக்காத
இரவுக்காட்சி
அடுத்த நாள் காலைவரை
அரங்கேறத் தொடங்கியது!

# எல்லோரும் வாழட்டும்



சத்தியம் பொங்கட்டும்!
சமத்துவம் பொங்கட்டும் நாட்டில்
நித்தமும் உழைப்போர்க்கு
நிம்மதி பொங்கட்டும்
வீரம் பொங்கட்டும் விடுதலை
வேட்கை பொங்கட்டும் நெஞ்சில்
ஈரமும் பொங்கட்டும்
ஈசனருள் கிட்டட்டும்

அன்பு பொங்கட்டும்
அகிம்சை பிறக்கட்டும் மனிதப்
பண்பு வளரட்டும்
பகைமை ஒழியட்டும்
துன்பம் நீங்கட்டும்
துணிவு பிறக்கட்டும்
இன்ப மாகவே
எல்லாரும் வாழட்டும்

மானம் பொங்கட்டும்
மதி வன்மை பொங்கட்டும் மங்கையரில்
நாணம் நிலவட்டும்
நலன்கள் பெருகட்டும்
வானம் பொங்கத்
தளிர்கள் செழிக்கட்டும்
கானம் இசைக்கவே
கவிதைகள் பிறக்கட்டும்

(சிந்தாமணி மார்ச்சு 1988)

# ஒரு லயத்து ராகம்



**நா**ங்கள்
கூடையைச் சுமந்தே
குட்டையானோம்!

எங்கள் இடுப்பில்
படங்கைக் கட்டியே
இடை சிறுத்துவிட்டது!

மட்டம் வெட்டித்
தளிர் பறித்தும்
இச் சமூக அமைப்பில்
மட்டமாகவே
மதிக்கப்படுகிறோம்!

தேயிலைத் தளிர் கொய்தும்
இந்த ஜனநாயகத்தில்
நாங்களே
தேநீராகிறோம்.

இத்தேசத்தின்
தேசிய வருமானத்தில்
எழுபத்திரண்டு சதவீதம்
ஈட்டித் தருபவர்கள்
நாங்கள்தான் - எனினும்
இன்னும் நாங்கள்
வாங்குவது
நாட்சம்பளமே!

இந்நாட்டிற்கு
நாங்களே முதுகெலும்பு
இறுதியில்
எங்களிடம்
எஞ்சி நிற்பதோ
விலா எலும்புகளே!

இலங்கை
ஒரு தீவு
எங்களில்
கடலைப் பார்த்தவர்கள்
எத்தனைபேர்?

கிட்டேயிருந்து
தொட்டுவிடும்
வட்ட வான்வெளிதான்
எமக்கு வாய்த்த உலகமாய்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

மழையில் நனைந்து
வெயிலில் காய்ந்து
பனியில் உறைந்து
தேயிலைத் தோட்டத்திலேயே
தேயிலையாகிறோம்.

பாவம்
எங்கள் குழந்தைகள்!
எங்களின்
உள் மன உளைச்சல்களுக்குப்
பலியாகிப் போவது
அவர்கள்தானே!

வீட்டிற்கு வந்தால்,
கணவனின் ஏச்சு!
வேலைக்குப் போனால்,
கணக்கனின் ஏச்சு!

இப்படி
புழுங்கிப்புழுங்கி
எங்கள் கோபம்
எங்கள்
பிள்ளைகளிடம்தான்
பிரட்டுத்தப்பாய்
பிறவி எடுக்கிறது

அதோ,
அந்தத் தேயிலைத் தளிர்கள்
சிரிக்கின்றன...
செடிகளுக்கடியிலோ
எம்மவர் கல்லறைகள்!

இது
நாங்கள்
வளமாக்கிய பூமி
எங்கள் வாழ்வோ
இன்னும்
வளமாகவில்லை.

இந்த நிலம்
பசுமையானது
கூடையிலும் வயிற்றிலும்
சுமந்து சுமந்து
பசுமையை மறந்தோம்.

"பொட்டப்புள்ள படிச்சி
என்னத்தைக் கண்டா?
மலையேறிக் கொழுந்தெடுத்தா
நாலு காசு மிஞ்சும்"
இருபத்தோராம் நூற்றாண்டின்
தொடக்கத்தில்
இப்படியும் சில பெற்றோர்கள்

ஆதலால்தான்
கம்ப்யூட்டர் யுகத்திலும்
சுண்டுவிரல் காயத்திற்கு
சுண்ணாம்பு போடுகிறோம்.

நிலாவிற்கு
வீசா வாங்க
விண்ணப்பிக்கும் யுகத்தில்
தேயிலைக் காடும்
எட்டடி வீடுமே
தேவலோகம் என
வாழ்க்கை நடத்துகிறோம்.

இந்த
தியாகத் தளத்தினிலே...
விமோசனங்கள்
மலர்வதெப்போ?

எங்கள்
விடிவிற்காக நாங்களே
விழித்தெழுந்து விட்டோம்.

சுரண்டியைப் பிடிப்பவன் சந்ததி
சுரண்டியைத்தான் பிடிக்கும் என்ற
சொல்லுக்கே சுருக்குப் போடுவோம்!

எங்கள்
கூடையிலிருந்து கொட்டும்
ஒவ்வொரு
கொழுந்தின் இதழும்
எங்கள்
குழந்தைகட்கு
புத்தகமாய்
மலரட்டும்.!

கத்தியும் சுரண்டியும்
பிடித்த
எங்கள்
பிள்ளைகளின் கரங்கள்
பேனாவும் புத்தகமும்
பிடிக்கட்டும்.!

எங்களது
வியர்வையும்
இரத்தமும்
அவர்களுக்கு
மையாக மாறட்டும்.!

மலை முகடுகளில்
தளிர் பறிக்கத்
தலை குனிந்தோம் நாங்கள்
தலை நிமிரட்டும்.
எங்கள்
தலைமுறை!

---

சுரண்டி - தேயிலைக் காடுகளில் கலையெடுக்க பயன் யடுத்தப்படும் ஆயுதம்.

# புதுயுகம் படைத்திடு



செத்து மடிவது
ஒரு முறைதான் நண்பா!
சிந்தித்து செயல்படு
செயலில் புயலென...
வித்தகம் பேசும்
வீரன் நீயல்ல
விழித்தே யெழுந்திடு
பாரினை நீ வெல்ல!

ஆண்டாண்டு காலமாய்
தேயிலை மண்ணுக்கே
அர்ப்பணித் திட்ட
உன் வாழ்க்கையிலே
மீண்டும் உனக்கொரு
மீட்சி இல்லையெனில்
மீறி யெழுந்திடு
மீட்பை அடைந்திடு!

வறுமையிலே தினம்
வாழ்ந்திட்ட போதும்
வலிமை குன்றி
நீ வாழாதே!
பொறுமை யாய் வாழ்தது
போதுமென நீ
பொங்கி யெழுந்திடு
புதுயுகம் படைத்திடு!

# வார்த்தைகள் இல்லாத பாஷைகள்



## இந்தப் பூபாளம்...

போலிகள் உடைந்து,
யுத்தத்தின் சத்தங்கள் தீர்ந்து
மனித உறவுகள் மலர
இயற்கையில் ரசனை வளர...



# பொழுதுவிடிஞ்சாச்சு

விண்ணூர்க் கல்லூரியில் விழா!
நிலவுமகள் காலேஜ் வர
கண்ணடித்து நின்றார்கள்
நட்சத்திர மாணவர்கள்!

எங்கிருந்தோ வந்த
மின்னல் தலைவர்
அறிவித்தார்
“விழாவின்
முதல் நிகழ்ச்சி
ஒளி ஒலி”

மேக இசை வல்லுநர்கள்
மழை இசையைப் பொழி
தொலைந்து போனார்கள
நிலவுப் பெண்ணும்
நட்சத்திர மாணவர் ளும்!

தொலைந்தோரைத் தேடி
மேடைக்கு வந்தார்
சூரியத் தலைவர்!
ஓ...
விடிந்து விட்டது!

# நீ ஏன் வரவில்லை?

நீ
ஏன்
வரவில்லை?

உன்
நினைவுகளை
அழைத்துக்கொண்டு
கடற்கரைக்குப் போனேன்!

வழக்கமாக
வைகறையில் வரும் நீ
அன்று மட்டும் ஏன்
லீவு போட்டாய்?

உனக்குத்தான் தெரியுமே
உன்னைத்
தரிஷித்த பின்புதான் என்
அன்றாட அலுவல்கள்
ஆரம்பமாகுமென்று!

எனக்கு
ஞாபகமில்லை நமது
முதல் சந்திப்பு
எப்போது நிகழ்ந்ததென்று,
ஆனால்
சந்தித்த நாள்முதல்
நேற்றுவரை
சரியான டயத்துக்குத்தானே
வந்து கொண்டிருந்தாய்.

நீ
வரும்போதே
உயிர்களின் வாழ்க்கைக்கு
உத்தரவாதம் கொடுப்பவனல்லவா
நீ
பொழுதெல்லாம்
கர்வப்பட வேண்டிவன்
காலையில் மட்டும் ஏன்
நாணப்படுகின்றாய்?

வெட்கத்தோடு
வீதியில் வரும்போது
மனித ஜீவன்களுக்குள்தான்
எத்தனை பரபரப்பு?

உனக்குத்தான்
உற்றுப்பார்ப்பது பிடிக்காதே?
தூரத்திலிருந்தே பார்வையாலேயே
சுட்டெரித்து விடுகின்றாய்!

உன்னை
நெருங்க வேண்டுமென
நினைத்துக் கொள்வேன்.
நீயோ
மரணித்தவுடன் தான் அது
சாத்தியப்படலாம் என
விஞ்ஞானத்தில் விளக்குகின்றாய்!

நீ
ஏன்
இன்னும் வரவில்லை?

காதலில்
காத்திருப்பு சுகமானது
என்பதைக்
கற்றுக் கொடுக்கத்தான்
என்னைக்
காக்க வைக்கிறாயோ?

ஓ...
என்னது
உன்னைப் பார்க்காமலே உன்
பிரசன்னத்தை
உணர முடிகிறதே!

நீ
வந்து விட்டாயா?
வந்து கொண்டிருக்கிறாயா?
சூரியக் காதலனே!
இப்போது புரிகிறது!

நீ
உதயமுக்குத்தான் வந்திருக்கிறாய்
இந்த
மேக வில்லன்கள்தான்
உன் பாதையை
மறைத்துக் கொண்டார்கள்
என்பது எனக்குத் தெரியவில்லை!

(வீரமாமுனிவர் இலக்கியப் பேரவை 4.4.94 இல் நடத்திய கவிதைப் போட்டியில் வாசித்தது.)

# கருவறைத்தாரிகை



அன்னையே
எனக்காக
என்னெழுச்சிக்காக
தன்னையே அர்ப்பணித்த
உன்னையே பூஜித்து
உலகில் வாழ்கின்றேன்

மண்ணில் வாழும்
நாள் வரைக்கும் நான்
உன்னில் வாழ்கின்றேன்
கண்ணில் தெரிவதும்
நின் உருவம் அகக்
கண்ணில் காண்பதும்
உன் உருவம்

பள்ளி செல்கின்ற
மாணவன் நான் - பாடப்
புத்தகங்கள் சுமக்கத்
தவிக்கின்றேன்.

நீயோ
பத்து மாதங்கள்
கருவில் சுமந்தாயே
கருவறையில்
எனைவரைந்த
தூரிகையே உன்
கருணைக்கு ஏதம்மா
வரையறை

கால் காசு?
கடன் வாங்க
கஷ்டப்பட்ட காலத்தில்
காலை மாலை என்று
கணக்குப் பாராமல் நிதம்
பாலை வார்த்திட்டாய்


அது
ஆகாரப்பால் மட்டுமல்ல;
அன்புப் பால்
அறிவுப் பால்

அத்தனையும்
மொத்தமாகக் கொண்ட
சுத்தமான கவிதைக்கு
எழுத்துப்பால்

கவிதைப் பால் ஊட்டிய
கலைமகளே என்
கவிதையில் காண்பதும்
உனையன்றோ?

ஈன்றபொழுதில்
உன் முகத்தில்
தோன்றிய ஒளியினை
காணக்
கிடைக்கவில்லையாம்
நான்
கைக்குழந்தையல்லவா?
ஆதலால்...
சான்றோன் என்ற
பெருமையுடன் உன்னை
தரிஷிக்க வருகிறேன்

அப்போது...
பூரித்த முகத்தின்
புன்னகையின்
கோலத்தை
ஆனந்தக் கண்ணீரால்
ஆசிக்கும் ஆசியினை
கற்பனையில் எண்ணி
நான்
கவிதை வடிக்கிறேன்!




சில சந்திப்புக்கள்
தித்திப்புக்கள்
தருகின்றன!

இன்றைய உனது
வருகை எனக்கு
உவகை!

நட்டு வைக்காமலே
முளைப்பதுதான்
நட்புச் செடி!

நேற்றுவரை
யாரோவானவர்கள்
இந்த அந்தியில்
நண்பர்களாகினோம்!

உன்
முகவரி தெரியும் முன்பே
அகவரியைக் கண்டு கொண்டேன்!

நீ...
எதையும் ரசிப்பவள்
ரசனைக்கும் உரியவள்!

என்
கவிதைகள்
எத்தனை யதார்த்தமானவை
என என்னைக்
கர்வமுறச் செய்தாய்!

என் வரிகளை நான்
வாசித்தவுடன் நீ
புன்னகையை வீசிக்கொண்டே
புகழாரம் சூட்டினாய்.

"எனக்காகத்தான்
எழுதினீர்களோ?
உங்கள் எழுத்துக்களில்
என் அனுபவங்களெல்லாம்
ஒளிந்து கிடக்கிறதே!"

அந்த
உனது பாராட்டலில் என்
பாடலின்
அடர்த்தி அதிகமானது!

அந்த
உனது ரசனையில் - நான்
நனைந்து போனேன்!

அந்தப் பொழுதிலேயே
எண்ண ஓடத்தில்
இருவருமாகவே
பயணித்தோம்!

நீ நிகழ்த்திய
குட்டி விரிவுரையில் நான்
ரசிகனானேன்!

"இலக்கியப் பெண்ணே! நீ
கற்பனைக் கவிதையை
ரசிக்கலாம்! ஆனால்
உனக்காக ஒரு
நிஜக்கவிதையே
உருவாகியதே
எனக்குள்!

நீ
"நேரமாச்சு" என
வெளியே வந்தாய்!
அப்போதுதான் நான்
வினாவினேன்..

"என்னம்மா
உன் பெயர்"
நீயோ
நின்று நிதானித்து விட்டு உன்
செல்லப்பெயரை
மெல்லச் சொன்னாய்!

ஒருமுறைதான் நான்
உச்சரித்தேன் ஒரு
கவிதைப் பெயர் என்
உதடுகளால் காயப்படலாமா?

சற்றுத்தூரம் போனவள்
சட்டென்று திரும்பி ஒரு
விண்ணப்பம் செய்தாய்.
"இருட்டாகி விட்டது!
ஹாஸ்ட்டல் பையன்கள்
ஒரு மாதிரியாய்ப் பார்ப்பார்கள்
ஸ்டேஷன் மட்டும்
துணைக்கு வருகிறீர்களா?"

அன்று
மின்விளக்குப் போடாதவனுக்கு
என்றென்றும் என் நன்றி!
இரண்டடி இடைவெளியில் நாம்
பேசிக் கொண்டே நடந்தோம்
நீ கேட்டாய்
"எந்த ஊர்?"
"இலங்கை"
"எனக்கு இலங்கைத் தமிழர்கள்
என்றால் ரொம்பவும் இஸ்ட்டம்"

"அப்படியா"?
"ஆமாம்"
அவர்களோடு பேசினாலே
மனசு இதம் பெறும்!
நான் சொன்னேன்...
"ஆமாம் பெண்ணே
கண்ணுக்குத் தெரியும்
மனிதர்களை மதிக்காவிட்டால்
கட்புலனுக்குத் தெரியாத
கடவுளை
எப்படி நேசிப்பது?"

நீ
மறுபடியும் ஒரு
புன்னகையைப்
பூத்துவிட்டுச் சொன்னாய்
'நீங்கள்
அழகாகப் பேசுகிறீர்கள் உங்கள்
கவிதையைப் போலவே!'

ரயிலடியை நெருங்கினோம் நீ
தண்டவாளத்தைத்
தாண்டிவிட்டு
"அடுத்தவார ஈஸ்ட்டருக்கு
அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!" என்றாய்

கள்ளமில்லா பெண்ணழகே!
உன்னைப் போன்றவர்களின்
உளமார்ந்த வாழ்த்துக்களால்தான்
நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!

ரயில் வந்தது! நீ
கடைசித் திருப்பம்
மறையும் வரை
கையசைத்துக் கொண்டே
மறைந்து போனாய்!

வீட்டிற்கு வந்து
நாற்காலியில் வீழ்ந்தேன்
அலை அலையாய்க் கற்பனைகள்
அசைந்து வந்தது

பேனாவை எடுத்து
டயரியை விரித்தேன்.
பிறந்தது இந்தக்
கவிதை!

சில நபர்கள்
சந்திக்கும்போது
இதயத்தில்
பூக்கள் பூப்பதால் இது
சந்திப்பு அல்ல;
சந்தி "பூ"
தித்திப்பு அல்ல;
தித்தி "பூ"

இந்தப் பூக்கள் நம்
நட்புச் செடிமேல்
பூமாரி பொழியட்டும்!

* List, each revelation He has made
in friendship.

# மௌனமே கீதமாய்



நீ
என்னை
நேசிக்கவில்லையென்று
யார் சொன்னது?

வார்த்தைகளால் என்னை
வசப்படுத்தாமல்
புன்னகையாலேயே
உன் காதலைப்
புரிய வைக்கிறாயோ...?

இரவெல்லாம்
உறங்கும்போது
என்ன நீ
எண்ணிக் கொண்டிருப்பாய்...?

உன் வீட்டு வாசலில்
கோலமிட்டுக் கொண்டே
குனிந்த தலை நிமிராமல்...
புருவத்தை உயர்த்தி
உதடுகள் நோகாமல்
வார்த்தைகள் சிந்தாமல் என்னைக் கண்டவுடன்
குட்மார்னிங் சொல்வதெப்படி என
ஒத்திகை பார்ப்பாயோ...?

உன்
விரல்கள்
வீதியில் கோலமிடலாம்
விழிகள் இடுகிறதே என்
நெஞ்ச நிலத்தில் கோலம்.

நீ...
நேசிக்கவில்லையென்று
யார் சொன்னது...?

கல்லூரி வானத்தில்,
தோழிகள் மேகமாய்த் தொடர்ந்து வர
நிலவுப் பெண்ணாய்
நீ நடந்து வருகையிலே...
என்னைக் கண்டவுடன்
சட்டென்று திரும்பி
மின்னலென புன்னகைத்து
மேகத்துக்குள் மறைந்து விடுகிறாய்.

எனக்குளல்லவா இங்கு
இடைவிடாமல்
இடி இடிக்கிறது.
நீ
நேசிக்கவில்லையென்று
யார் சொன்னது?

இலக்கியக் கூட்டங்களில் நான்
எழுந்து நின்றவுடன் எழும்
கரவொலிகளுக்குள் உன்
கைத்தட்டல் மட்டுந்தான் என்
செவிக்குள் செல்கிறது.

கன்னச் சிரிப்பழகே உன்
உள்ளங்கை கூட
புன்னகைக்கிறதா?
இந்தக் காது மடல்கள் உன்
ஒருத்தியின் தட்டலைத்தான்
உட்கிரகித்துக் கொள்கிறது.

மேடையில்...
என் கவிதைகளை
வாசிக்குபோது நீ
என்னையே
வாசித்துக் கொண்டிருப்பது...
"என்னவரே...
உங்கள் கவிதையைப் போல
உங்களையும் நான் நேசிக்கிறேன்
எனச் சொல்லவில்லையா?
நீ
நேசிக்கவில்லையென
யார் சொன்னது?


போட்டிகளில் வெற்றியீட்டி
உன்னிடம் வாழ்த்துப்பெற
ஓடோடி வருகையிலே

சற்று நேரம் காத்திருந்து
தலை சாய்த்துக் கண்மூடிப்
பெற்ற மகிழ்ச்சியினைப்
பேரழகே நீ சொல்லுவது,
"அன்பரே...
நான் அங்கீகரிப்பது உங்கள்
கவிதையை மட்டுமல்ல
காதலையும்தான்" என
கண்ணே நீ சொல்லவில்லையா?
நீ
நேசிக்கவில்லையென்று
யார் சொன்னது?

கல்லூரி முடித்து தினம்
கலையும்போது ஒரு
சோகப் புன்முறுவலை
சுகமாக உதிர்த்துவிட்டு நீ
போகின்ற வேகம்
"இனியவரே..
இந்த சின்னப்பிரிவைக் கூட
என்னால் தாங்க முடியவில்லையென
சிக்கனமாய்த்
தெரிவிக்கவில்லையா?
நீ
என்னை நேசிக்கவில்லையென்று
யார் சொன்னது?

(வீரமாமுனிவர் இலக்கியப்பேரவை நடத்திய
கவிதைப் போட்டியில் 26-11-94 இல்
வாசித்தது.)

# தேறுதல்



**பொய்** பேசுகிறாய் என்
கவனத்தையெல்லாம் உன்பால்
ஈர்த்துக்கொள்ள வேண்டுமென
பொய் பேசுகிறாய்.
ஆயிரம் பொய்யைச் சொல்லச் சொன்னது
கல்யாணத்திற்குத்தான்
காதலிக்க அல்ல;

சௌகரியமான வாழ்க்கையில்லையே
எனச் சங்கடப்படுவதை விட
அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகிறதே என
ஆனந்தப்படு.

குவைத்தில் சேர்த்து வைக்கப்பட்ட
சொத்துக்களையெல்லாம்
வளைகுடா யுத்தத் தீ
வாரி எரித்துவிட
கட்டிய உடையோடு கையில்
கடவுச் சீட்டோடு
உன் தந்தை
வீடு வந்தார் என
விம்மினாய்!

ஓ...
நீ எத்தனை மகிழ்ச்சியானவள்!

யுத்தத்தில் செத்துப்போன
பெற்றோர்களை எண்ணி
பித்துப்பிடித்து விட்ட
பிள்ளைகளை விட நீ
எவ்வளவு
கொடுத்து வைத்தவள்.

உயிரோடு வந்து விட்ட அப்பா!
'அப்பா' என
ஆனந்தமாய் அழைக்க
அருகிலேயே உடனிருக்கும்
அன்பான அப்பா!

உன் கல்யாண வைபோகத்தில்
காலில் வீழ்ந்து ஆசிபெற
கனிவான அம்மா!

அடிக்கடி சண்டையிட
ஆதரவான அண்ணன்!

நீ....
எத்துணைச்
சந்தோஷமானவள்!

பிரம்மனின் இயக்கத்தில்
சூழ்நிலை திரைப்படத்தில்
ஏழைப்பெண் பாத்திரத்தை
இயல்பாகச் செய்தாலும் சற்று
மிகையாகச் செய்கிறாய்!

நீ...
ஒரு சராசரி
இந்தியக் குடிமகள்தான்
ஏழையல்ல!
மனங்கொள்
மகிழ்ச்சி என்பது
மனத்தின் நிலைப்பாடு!

வாங்கிய கடனை
கட்டத்தான்
வாழ் நாளெல்லாம்
உழைக்க வேண்டுமென
கண்ணே நீ
கண்ணீர் விட்டாய்!

கலங்காதே!
கடனாக அல்ல
நிரந்தரமாகவே உன்
நெஞ்சத்தை வாங்க
இன்னொரு நெஞ்சம்
எங்கோ ஓரிடத்தில் உனக்காகக்
காத்திருக்கும்.

உன்
கண்களில் வழிகின்ற
கண்ணீரைத் துடைக்க
கைக்குட்டை அல்ல
கரங்களே வரும்
காலம் உண்டென்று
களிப்படை!

*25.11.1993*

* Happiness is the state of mind





தேடிக் கொண்டிருந்தேன்
பாடுபொருள் - நான்
கவியெழுத!
உன்னைக் கண்டவுடன்
என்னைத் தேடிக் கொண்டிருந்தன
பாடு பொருள்கள் - நான்
கவியெழுத!




எப்போது
மணியடிக்கும் என
ஏங்கிக் கொண்டிருக்கும்
இதயம்
உன்னைக் கண்டவுடன்
இப்போதே
அடித்து விடுமோ என
அடித்துக் கொள்கிறது.

# மனதின் பரிமாணங்கள்



கார்த்திகை மாதத்துப் பரீட்சை!
கையில்
கலிங்கத்துப் பரணி!

விழிகள்
எழுத்துக்களை மேய்கிறது
மனம் எங்கோ
தொலை தூரத்தில்...

எழுத்துக்கள்
பரிச்சயமானதால்
இலகுவில்
வாசித்து விடலாம்
விளங்கிக் கொள்ளாமலேயே!

வளைத்துப் பிடித்து
இறுக்கி நிறுத்தி வைத்தாலும்
கட்டுக்குள் அடங்காமல்
கற்பனை சிறகடிக்கிறதே
இந்த மனம்!

புத்தகத்தை மூடிவிட்டு
கதவைத் திறந்து
வெளியில் வந்து
வானத்தை வாசித்தால்
நிலவு நிலவாகத் தெரியவில்லை!
புதிய தோழியுடன்
முகமாகத் தெரிகிறது!

பரீட்சைக்குப் படிக்கவேண்டும் என
எண்ணுகையில்
செவியில் ஒலிக்கிறது
நேற்று வானொலியில் கேட்ட
“நேற்று இல்லாத மாற்றம் என்னது”?

மனம்
அசைபோடுகிறது!

அடுத்த வெள்ளியில்
வெளியாகும் புதுப்படம்

பல்லவனில் போன
பாவையின்
கனநேரத்துப் புன்னகை!

வீட்டிற்கு முன்னாலுள்ள
மதிலில் ஒட்டப்பட்டிருந்த
அரசியல் போஸ்ட்டர்

இந்த மனம்
அழுக்கானது
அருவருப்பானது
அசிங்கமானது!

அடுத்தவன் சொத்திற்கு
ஆசைப்படும் மனம்
அசைபோட்டு அசைபோட்டு
யோசிக்கும் மனம்
பிரியமான தோழர்களிடம்
கோபப்படும் மனம்
பிரிவென்று வந்தால்
அழுகின்ற மனம்
கன்னியரின் உள்ளங்களை
நாடுகின்ற மனம்
கதைபல பேசத்
தூண்டுகின்ற மனம்
குப்பையான எண்ணங்களைக்
கூட்டிவைக்கும் மனம்
தவறான கற்பனைக்குகத்
தாளமிடும் மனம்!

பொல்லாத மனம் - ஓரிடத்தில்
நில்லாத மனம் - சிலரின்
கல்லான மனம் - என்
கவிதைக்குச்
சொல்லாகும் மனம்!

அன்பு செய்யும் மனம்
அரவணைக்கும் மனம்
காதலிக்கும் மனம்
கவிபாடும் மனம்
ரசிக்கு மனம் அழகை
ஆராதிக்கும் மனம்!
கேள்வி கேட்கும் மனம்
விடை தேடும் மனம்
நல்ல மனம்
தாராள மனம்
மன்னிக்கும் மனம்
உதவி செய்யும் மனம்

ஓ...
நல்லதும் கெட்டதும்
கலந்து கட்டின
கதம்பம்தான் மனமா?
இறைவா!
இறந்த காலத்திற்கும்
எதிர் காலத்திற்கும்
நீந்திக் கொண்டிருக்காமல்
நிகழ்காலத்தில் மனதை
நிலைப்படுத்த
நித்தியமாய்
வரம் கொடு

*26.09.1993*

# நிலவின் மறுபக்கம்



நாங்கள்
விபச்சாரிகள்
விபத்தில் சாரியைக் கலைந்ததால்!

நாங்கள்
பருவத்தின் வாசலை
எட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதால் சிலர்
எங்கள் வீட்டு வாசலைத்
தொட்டுப் பிடிக்கத் துடிக்கிறார்கள்.

பெற்றவருக்குப்
பென்ஷன்.
கல்லூரி அட்மிஷனுக்கு
காத்திருக்கும் தம்பிகள்,
கனவுகளைச்
சுமந்த வண்ணம்
தங்கைகள்,
சாவோடு போராடும் தாய்.

வறுமையில்
வலிமையிழந்த
குடும்பத்திற்கு மருந்து
கட்டாயச் சேலைக் கலைப்பு.

நாங்கள்
தலைக்குப் பூச்சூடுவது
தமிழ் மரபுக்கன்று
சாகக் கிடக்கும் தாய்க்கு
மருந்து வாங்க.

நாங்கள்
கண்ணுக்கு மை தீட்டுவது
அழகுக்காக மட்டுமன்று
கண்ணீருக்கு
அணையாகவுந்தான்.

நாங்கள்
உதட்டிற்குச் சாயம் பூசுவது
ஒப்பனைக்காக மட்டுமன்று எங்கள்
உதிரம்
உலராமல் இருக்கவுந்தான்.

நாங்கள்
முகத்திற்கு பவுடர் பூசுவது
வாசனைக்காக மட்டுமன்று
வயிற்றுப்பாட்டுக்காகவுந்தான்.

நாங்கள்
ஆடை அவிழ்ப்பது
ஆடை வாங்கவே!

எங்கள்
மூக்குத்தி ஜொலிப்பது
வீட்டில் விளக்கெரியவே.

எங்கள் இளமை
பிறருக்குத் தீனியாவது
எங்கள் இரப்பைக்குத்
தீனிபோடவே.

நாங்கள்
இரவைத்தேடுவது
பகலில் வாழவே!


நாங்கள்
கவிஞர்களின்
கவிதைக்குக்
கருவாகிறோம்.
ஆனால் நாங்களே எங்கள்
கருப்பையில் வளரும்
கருவைக் கலைக்கிறோம்.

போதும்
உங்கள்
பேனா ஆயுதத்தால்
பேருலகில்
எத்தனையுத்தம்
எங்களுக்காக

எறிந்து விடுங்கள் உங்கள்
எழுதுகோலை
இதோ....
கழுத்தை நீட்டுகிறோம்
தாலியிடச் சம்மதமா?

# சூரியோதயம்

அந்த
நீலக்கடல் தாளில்,
சிவப்பு மையினால்,
ஒவ்வொரு விடியலிலும்
கடவுள் எழுதும்
கடிதத்தின்
முதலெழுத்து!



# அஸ்தமனம்

அந்த
நீலக்கடல் தாளில்
சிவப்பு மையினால்
ஒவ்வொரு மாலையிலும்,
கடவுள் எழுதிய
கடிதத்தின்
கையொப்பம்!

# அறுவடை



சுத்தமான காலை;
சுகமான செப வேளை.

புத்தம் புதிய நிமிஷங்கள்;
புதிய புதிய தேடல்கள்.

ஒவ்வொரு நாழிகையும்
என்னைக் கடக்கும் போது
மரணத்தை நோக்கியே
பயணிக்கிறேன்.


இந்தப்
பரிசுத்தமான நிமிஷங்களை
எந்த அளவில் - நான்
அறுவடை செய்கிறேன்?

விதை விதைக்காமல்
அறுவடையைத் தேடும் மனிதர்கள்.

இயற்கை தன் பணியை
இடைவிடாமல் செய்கிறது.
மனிதன்தான்
சோர்ந்து போகிறான்.

காலங்கள்,
கடவுள் அருளிய தாலந்துகள்.
அதை,
மண்ணில் புதைப்பவன்
வாழ்ந்தாலும் மரணிக்கிறான்;
அறுவடை செய்பவனோ
இறந்தாலும் வாழ்கிறான்!

*1.3.96*



இருபத்தோராம் நூற்றாண்டின் விளிம்பில்,
தனிமனித வாழ்வும், சமூக வாழ்வும்
போர்க்களமாக மாறிவரும் காலச்சூழலில்,
என் கவிதைகள் மனிதம் மலர பூபாளம்
பாடட்டும்.

பெனி.

---

## இந்நூலைப் பற்றி...

கவிக்கோ. அப்துல் ரகுமான்

புதிய யுகம் விழித்தெழட்டும்!
தேயிலைக் கொழுந்துகள் போலவே
தாயகத்திலிருந்து பறிக்கப்பட்டுத் துயர
நெருப்பில் தங்கள் கண்ணீரிலேயே
வெந்து, யார் யாரோ பருகத் தங்கள்
சாற்றைத் தருபவர்கள் மலையகத் தமிழர்கள்.

அந்த மலையகத் தமிழர்களின் கண்ணீரில்
பூத்திருக்கின்றன இளங் கவிஞர் பெனியின்
கவிதைகள்.

பெனியின் பூபாளத்தில் புதிய யுகம்
விழித்தெழட்டும்.